# ஸ்ரீமந் நிகமாந்த
# மஹா தேசிக விஜயம்



ஆசூரி நாராயணன், ஆசூரி சுதர்ஸனன்.

# ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிக விஜயம்

ஆஸூரி நாராயணன்,
ஆஸூரி ஸுதர்ஸனன்.

This book is published with the financial assistance of TIRUMALA TIRUPATI DEVASTHANAMS under their scheme *"aid to publish religious books."*

**THE LOTUS PUBLICATIONS,**
22, Venkatarangam Second Street,
TRIPLICANE, MADRAS-600 005.

# First Edition - October, 1991.

## பொருளடக்கம்


1. ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிக விஜயம் 1

2. ஸ்ரீ தேசிக திவ்ய ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம் 15

3. ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகாஷ்டோத்தர
சதநாம ஸ்தோத்ரம் 42

ஸ்ரீ நிகமாந்த தேசிகாஷ்டோத்தர சத நாமாவளி 44

4. ஸ்ரீமத் வேதாந்த தேசிக ப்ரபத்தி 46

5. ஸ்ரீ தேசிக மங்களாசாஸநம் 47

5. பிள்ளையந்தாதி 48

7. ஸ்ரீமத் வேதாந்த குரு தண்டகம் 53

8. ஸ்ரீ தேசிகன் வாழித் திருநாமம் 55

9. திருநாள் பாட்டு 56

# ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிக விஜயம்

*ஸ்ரீமான் வேங்கட நாதார்ய :*
*கவிதார்க்கிக கேஸரீ I*
*வேதாந்தாசார்ய வர்யோமே*
*ஸன்னிதத்தாம் ஸதாஹ்ருதி II*

'குருர் பிரம்மா, குருர் விஷ்ணு: குருர் தேவோ மஹேஸ்வர:, குருர் சாக்ஷாத் பரம்ப்ரம்ஹ'........................... (முழுமுதல் பரம்பொருளே ஆசாரியனாக வந்து தோன்றி, அருள் நெறி காட்டுகிறார்) என்று பெரியோர் கூறுவர். ஸ்ரீ ஆதிசங்கரர் வரலாற்றிலும் வேதாந்த தேசிகர் சரித்திரத்திலும் இவ்வுண்மை முற்றிலும் தெளிவாக விளங்குகிறது. சுவைமிக்க சாதனைகள் நிறைந்த ஸ்வாமி தேசிகன் திவ்ய சரிதம் நன்னம்பிக்கையை வளர்த்து, தெய்வத் திருவருளைப் பெற வழிகாட்ட வல்லது.

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகர் ஒரு நூற்றாண்டு காலம் தமிழகத்தில் வாழ்ந்து, 116 நூல்களை (கிரந்தங்களை) இயற்றியுள்ளார். இவற்றுள் பல சமஸ்கிருதத்திலும், சில தமிழிலும், வேறு சில மணிப்பிரவாள நடையிலும், ஒன்று பிராக்ருத மொழியிலும் எழுதப்பட்டுள்ளன. ஸ்வாமி தேசிகனால் கையாளப்படாத அணிகளோ, துறைகளோ இல்லை என்பர். அவராலு பல நூல்கள் மேன்மை பெற்றன என்பர்.

# திருவேங்கடமுடையானின் திருமணி (கண்டா) அவதாரம்

முக்தி தரும் நகர் ஏழில் முக்கியமானது காஞ்சி மாநகர். அக் காஞ்சி மாநகரில் திருத்தண்கா என்னும் திவ்யதேசம் உள்ளது. அங்கு தீபப்பிரகாசன் என்னும் திருமாலின் சந்நிதிக்கு வெகு அருகில் தூப்புல் என்னும் ஓர் அந்தணர் வாழ்விடம் (அக்ரஹாரம்) இருக்கிறது. (தூப்புல்—தூய்மை தரும் புல்—விசுவாமித்திரம் என்னும் தர்ப்பை நிறைந்த இடம், அல்லது விஸ்வாமித்திர கோத்திரத்தில் தோன்றிய பெரியோர்கள் அங்கு வாழ்ந்து வந்ததால், இவ்விடத்திற்குத் தூப்புல் என்ற பெயர் நிலைத்துவிட்டிருக்கலாம்.)

இத் தூப்புல் க்ஷேத்திரத்தில் அனந்தஸூரி – தோதாரம்பா என்ற ஒரு ஸ்ரீவைஷ்ணவ தம்பதியர் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்குத் திருமணமாகி பல ஆண்டுகள் கடந்தும், குழந்தைப் பேறு கிடைக்கப் பெறுமல் ஏங்கிக் கொண்டிருந்தனர்.

திருமலைக்கு இருவரும் யாத்திரையாக சென்று, திருவேங்கடமுடையானை மனமுருகி வேண்டி, குழந்தைப் பேற்றினுக்கு அவனருளை எதிர் நோக்கி, அங்கேயே தங்கி இருந்தனர்.

ஒரு நள்ளிரவு தோதாரம்பா ஒரு கனவு கண்டார்: எழிலொழுகும் ஓர் இளஞ்சிறுவனாக திருவேங்கடமுடையான் அக்கனவில் தோன்றி, "ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தத்தைத் தழைத்தோங்கச் செய்வதற்கு அதிமேதாவியான புத்திர ரத்தினத்தை அளித்தோம்; பெற்றுக் கொள்ளுங்கள்'', என்று சொல்லி திருமலைக் கோயிலில் உள்ள திருமணியைப் போன்ற திருமணியைத் தன் கணவரிடம் கொடுக்க, அந்தத் திருமணியைத் தான் வாங்கிப் பெற்றுக் கொண்டு விழுங்குவது போல் அக் கனவில்கண்டார். இதே கனவை அனந்தஸூரியும் கண்டதாக மறுநாள் காலையில் கண்விழித்ததும் சொல்லி, தோதாரம்பாவை வியப்பில் ஆழ்த்தினர்.

இது இப்படியிருக்க, மறுநாள் கோயிலில் பரிசாரகர் பூஜைக்குரிய மணியை வழக்கம்போல் எடுத்து வைக்கச்சென்றார். ஆனால் அது காணவில்லை. கைம்மணியின்றி எப்படி பகவானுக்கு நிவேதனம் செய்வதென்று எல்லோரும் வருத்த முற்றிருந்தனர்.

அப்பொழுது பகவான் கோயில் ஜீயர்பால் ஆவேசித்து, "ஸ்ரீராமாநுஜ ஸம்ப்ரதாய ரக்ஷணைத்திற்காக ஒரு மஹானைத் தோற்றுவிப்பதற்குத் திருமணியாழ்வாரை நாமே அனந்த ஸூரிக்கு அளித்துவிட்டோம். ஆகவே, இனி என் திருவாராதன காலத்தில் கைம்மணியை ஸேவிக்க வேண்டாம். நிலைமணி (பெரிய மணி)யொன்றை மட்டும் ஸேவித்தால் போதும்" என்று கூறினார்.

## தூப்புல் குலமணி

சில நாட்களுக்கெல்லாம் தோதாரம்மாள் கர்ப்பவதியானாள். தம்பதிகள் வேங்கடவனிடம் விடை பெற்றுக் காஞ்சிமாநகர் சேர்ந்தனர். காஞ்சியில் இவர்கள் வசித்து வந்த பகுதி 'தூப்புல்' என்பதாகும். இது 'தீபப்ரகாசர்' என்னும் விளக்கொளி எம்பெருமான் விளங்கும் திவ்யஸ்தலம். இந்த ஸ்தலத்தில் தம்பதிகள் இனிது வாழ்ந்துவந்தனர். வேங்கடேச விமல கண்டாவதாரமாய் அவதரிக்கப்போகும் மஹானுதலைப்பற்றி, மற்ற மானவர்களைப் போலன்றி, பன்னிரண்டு ஆண்டுகள் தமது தாயின் கர்ப்பத்தில் வளர்ந்து வந்தார்.

பிறகு, கலி 4370-வது வருஷத்திற்குச் சரியான (கி. பி. 1268) சுக்ல ஸ்ரீ புரட்டாசி மாதம் சுக்ல பக்ஷ தசமி திருவோண நக்ஷத்திரம் கூடிய புதவாரத்தில் தோதாரம்மையின் கர்ப்பமாகிய பாற்கடலினின்று பகலவன்போல் ஒரு ஆண் குழந்தையாக உதித்தார். அப்புள்ளாரும் தமது சகோதரிக்கு வெகு காலம் கழித்து உதித்த இக் குழந்தையின் தெய்விக ஒளியை மகிழ்ச்சியுடன் நோக்கி, வேங்கடவனின் அருளால் தோன்றியபடியால் 'வேங்கடநாதன்' என்றே நாமகரணம் செய்வித்தார்.

(தஞ்சாவூர் ஸரஸ்வதி மஹால் லைப்ரரி ஓலைச்சுவடியில் உள்ளதாக ஒரு பத்திரிகையில் வெளியான ஸ்ரீ தேசிகன் ஜாதகம் இங்கு தரப்படுகிறது. இதிலுள்ள சில மாறுதல்களுக்கு யாராவது ஆதாரம் தெரிவித்தால் அடுத்த பதிப்பில் குறிப்பிடுகிறோம்.)

# ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஜாதகம்

ஸ்வஸ்தி ஸ்ரீ சுக்ல ஸ்ரீ கதகலி 4370-க்குச் சரியான (கச்சிநகர்) அனந்தாசார் தோதாரம்மைக்கு வரத வேங்கட ப்ரஸாதம் ஸ்வப்னத்தில் அருளியபடி—கைரவிணீ தீர்த்தஸ்நானமும் ஆன பிறகும் புரட்டாசி மாதம் 11 ந் தேதி ஞாயிற்றுக்கிழமை 11-28க்கு சுக்ல

ஏகாதசி 6 நாழி—19 விநாடிக்கு திருவோண நக்ஷத்திரத்தில் கன்யா லக்னத்தில் (வேங்கட கண்டாம்சம்) அதிமானுஷ புருஷ ப்ரஜை அவதரணம் அல்லது சுப ஜனனம்—தூப்புல் புண்ய பூமி கச்சிநகர். 11 கடிகைகளும் 28 விகடிகையில் ஜனனம்.

கர்ப்பச் செல்லுபோக சந்திர மஹாதசையில் பாக்கி செல்ல வேண்டியது ௵0—மீ 9—நா 13

| | | | |
|---|---|---|---|
| | | | கேது |
| | இராசி | | சனி |
| சந்திரன் | | | சுக்ரன் |
| ராஹு | | அங் | ல குரு சூரியன் புதன் |

| | | | |
|---|---|---|---|
| கேது அங் | ல சூரியன் | | குரு |
| | நவாம்சம் | | புதன் சந்திரன் |
| சனி | | | |
| சுக்ரன் | | | ராஹு |

## க்ரஹ பாத சாராவளி

| | | |
|---|---|---|
| சூரியன் | ஹஸதம | —1 |
| சந்திரன் | திருவோணம் | —4 |
| அங்காரகன் | ஸ்வாதி | —4 |
| புதன் | ஹஸ்தம் | —4 |
| குரு | ஹஸ்தம் | —3 |
| சுக்ரன் | உத்திரம் | —1 |
| சனி | ஆயில்யம் | —2 |
| ராஹு | பூராடம் | —2 |
| கேது | திருவாதிரை | —4 |

(ஸ்ரீசைலம்—தாத்தாசார் அநந்தஸரோவரி)

(MSS. Palm leaves, Sherfoji's Saraswathi Mahal Library Tanjore.)

இது ஸ்ரீ வேதாந்த தேசிகன் திருவவதார ஜந்ம பத்திரிகை. ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் ஸ்ரீ பகவத்ராமானுஜருக்குப் பிறகு ஜகதாசார்யராகவும், வடமொழியிலும் தென்மொழியிலும்

சேர்ந்து நூற்றுக்கும் அதிகமான ஸத்க்ரந்தங்களை இயற்றியவராகவும் விளங்கிய ஒரு மஹாபுருஷனுடைய ஜாதகம் இது.

குறிப்பு : ஜனன காலம் உதயாதி 11—28க்கு என்றிருப்பதால் கன்யாலக்னமாக இருப்பதற்கில்லை. அந்த ஓலைச்சுவடி மிகவும் சிதைந்த நிலையிலிருப்பதாகவும் மேற்கொண்டு எதையும் செய்ய முடியாதென்றும் இதை அனுப்பியவர் குறிப்பிட்டபடியால் கன்யாலக்னமென்றே வைத்துக் கொள்வோம்.

## வித்யாப்யாஸம்

முறைப்படி சௌளம், உபநயனம் முதலியவைகளைச் செய்யப் பெற்றபின் 'வேங்கடநாதன்' தமது அம்மானை அப்புள்ளாரிடமே காவியம், நாடகம், சாஸ்திரங்கள் முதலியவைகளை அப்யஸித்து வந்தார். அக்காலத்தில், நடாதூர் அம்மாள் என்னும் ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸனாதிபதி காஞ்சி ஸ்ரீதேவராஜன் ஸந்நிதியில் சீடர்களுக்குக் காலக்ஷேபம் சொல்லி வந்தார். அப்புள்ளாரும் அம்மாளிடம் காலக்ஷேபம் செய்பவர். ஒரு சமயம் ஐந்து வயது நிரம்பிய மருமகன் வேங்கடநாதனை நடாதூர் அம்மாளுடைய காலக்ஷேப கோஷ்டிக்கு அழைத்துச் சென்றார் அப்புள்ளார்.

## ஆசார்ய கடாக்ஷம்

மஹாதேஜஸ்வியான இச்சிறுவனைக் கண்டவுடன் அம்மாள் காலக்ஷேபத்தைச் சற்று நிறுத்தி விட்டு, இச்சிறுவனைப்பற்றி விசாரித்த பிறகு மறுபடியும் காலக்ஷேபத்தைத் தொடங்குகையில், 'முன்பு எங்கே சொல்லி நிறுத்தினேன்?' என்று சீடர்களை வினவினார். காலக்ஷேபத்தில் விட்ட இடம் தெரியாமல் அனைவரும் திகைத்து நின்றனர். ஆனால் சிறுவன் வேங்கடநாதனோ, 'இந்த இடத்தில் இந்த வாக்கியத்தைச் சொல்லி ஸ்வாமி நிறுத்தியது,' என்று சட்டென எடுத்துக் கூறினார். வேங்கடநாதனின் ஞாபக சக்தியை மிகவும் புகழ்ந்த நடாதூரம்மாள் கீழ்கண்ட சுலோகத்தினால் இவரை வாழ்த்தினார்.

"ப்ரதிஷ்டாபித வேதாந்த ! ப்ரதிக்ஷிப்த பஹிர்மத ! ||
பூயாஸ் த்ரைலோக்ய மாந்யஸ்த்வம் பூரி கல்யாண பாஜநம் ||

(நீ பிறமதங்களைக் கண்டித்து, விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை நிலைநிறுத்தி, மூவுலகிலும் போற்றப்பட்டு ஸகல க்ஷேமங்களையும் அடைவாயாக") மற்றும், 'இவனே ஸ்ரீ பகவத்ராமாநுஜ தர்சநத்தைப் ப்ரவர்த்திக்க வல்லவன்' என்றும் ஆசீர்வதித்தார்.

இவ்வாறு, தமது ப்ராசார்யரான நடாதூரம்மாளிடம் ஆசி பெற்று, தமது 20 வயதுக்குள்ளாகவே வேத வேதாங்க தர்க்க

மீமாம்ஸாதி ஸகல சாஸ்திரங்களையும் மாதுலரான அப்புள்ளாரிடமே கற்றுத் தேர்ச்சியடைந்தார்.

## கிருகஸ்தரானார்

இப்படி இருபது ஆண்டுகளுக்குள் ஷட்தரிசனங்களிலும் ஸ்ரீ பாஷ்யம் கீதா பாஷ்யம் முதலான ஸகல வேதாந்த க்ரந்தங்களிலும் தேர்ச்சியடைந்த தமது மருகமனுக்கு ஸகல லக்ஷணங்களோடு கூடிய திருமங்கையார் என்னும் கன்னிகையுடன் விவாஹம் செய்வித்து க்ருஹஸ்த தர்மத்தை அனுஷ்டிக்கும்படி செய்தார்.

## வைநதேய மந்த்ரோபதேசம்

இப்படி ஸகல சாஸ்திர ஸம்பந்நராய் விளங்கும் வேங்கட நாதன் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தஸ்தாபனம் செய்வதற்கு ரக்ஷையாக அப்புள்ளார் வைநதேய (கருட) மந்த்ரத்தை அவருக்கு உபதேசித்தார். இப்படி உபதேசிக்கப்பட்ட மந்த்ரத்தை ஸித்தி செய்துக் கொள்வதற்காக ஏகாந்தப்ரதேசத்தைத் தேடிச் சென்று, திருவஹீந்திரபுரத்தில் ஸ்ரீ தெய்வநாயகன் ஸந்நிதிக்கெதிரேயுள்ள ஔஷதகிரியில் ஒரு அரசமரத்தடியில் அமர்ந்து வைநதேய மந்த்ரத்தை ஜபித்து வந்தார். பிறகு, கருத்மான் மனம் மகிழ்ந்து ப்ரத்யக்ஷமாகி, இவருக்கு ஸகல வித்யாதிநாதனான ஸ்ரீ ஹயக்ரீவனின் மந்த்ரத்தை உபதேசம் செய்தார். ஸ்ரீ தேசிகனும் நியமங்களுடன் ஸ்ரீ ஹயக்ரீவ மந்த்ரத்தை ஆவ்ருத்தி செய்ய ஹயக்ரீவன் ப்ரத்யக்ஷமாகி, 'நினைத்தபோதெல்லாம் உமது நாவிலமர்ந்து நால்வேதப் பொருளையெல்லாம் நவில்வேன்' என அருள் புரிந்தார்.

உடனே தேசிகன் முதன்முதலாக ஹயக்ரீவ ஸ்தோத்ரம், கருட பஞ்சாஶத், அச்யுதசதகம், தேவநாயக பஞ்சாஶத் என்னும் ஸ்தோத்ரங்களையும் மும்மணிக் கோவை, பந்துப்பா, கழற்பா, அம்மானைப்பா, ஊசல்பா, ஏசல்பா முதலிய தமிழ்ப் பாக்களையும் இயற்றினார்.

## கவிதார்க்கிகஸிம்ஹம்

ஸம்ஸ்கிருதம், ப்ராக்ருதம், தமிழ் என்னும் மும்மொழிகளிலும் கவிதைகள் புனைவதிலும், தர்க்கவாதங்களால் பிற சித்தாந்திலும் இவருக்குள்ள திறமையை நோக்கி, அக்காலத்திய பெரியோர்கள் ஸ்வாமிக்குக் 'கவிதார்க்கிகஸிம்ஹம்' என்னும் சிறப்புப் பெயரைச் சூட்டிப் போற்றி வந்தனர்.

## உஞ்ச்ச வ்ருத்தி சீலர்

இப்படி ஞானநிதியாய் விளங்கிய ஸ்வாமி, தமது கிருஹஸ்த ஜீவனார்த்தமாக யாரிடமும் சேவகம் புரியவில்லை; யாரையும்

அண்டவுமில்லை. தினந்தோறும் காலையில் நித்ய கர்மாநுஷ்டானங்களை முடித்துக் கொண்டபின், பகவந்நாம ஸ்மரணத்துடன் வெளியில் சென்று உஞ்ச்சவ்ருத்தியாகக் கொண்டுவரும் அமுதபடியைச் சமைப்பித்து பகவானுக்கு நிவேதனம் செய்தபின் தாம் புசித்துக் குடும்ப நிர்வாஹம் செய்துவந்தார். பாக்யவசமாக அமைந்த இவரது தர்மபத்தினியும் இவர் மேற்கொண்ட வ்ருத்தியைப் புனிதமாகக் கருதி அன்புடன் ஸேவை புரிந்து வந்தார்.

ஒரு நாள், ஸ்வாமி உஞ்சவ்ருத்திக்குச் செல்லும் போது, ஒரு தனிகரின் பத்தினி, இவர் வறுமை நீங்கி சில நாட்களாவது சுகமாக இருக்கட்டுமென்றெண்ணி உஞ்சவ்ருத்தி பாத்திரத்தில் அரிசியுடன் பொன் நாணயமொன்றையும் கலந்து சேர்த்து விட்டாள். ஸ்வாமி கிருஹத்திற்குச் சேர்ந்ததும், பாத்திரத்திலிருந்து அரிசியை எடுத்துச் சுத்தம் செய்யும்போது இவரது தேவி அரிசியுடனிருந்த பொன்காசைக் காட்டி 'இது என்ன?' என்று கேட்க, ஸ்வாமியும் 'இது ஒரு விஷப் புழு. இதை வீசி எறிந்து விடு' என்று கூற, அவ்வம்மையார் அப்படியே அதை வீசி எறிந்து விட்டாராம். 'இவரல்லவோ வைராக்ய சீலர்! இவ்வம்மையல்லவோ உத்தம தர்ம பத்தினி!' என்று எல்லோரும் போற்றினர்.

## வைராக்ய நிதி

தேசிகன் இவ்வாறு வைராக்ய நிதியாய் எளிய வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பது தேசமெங்கும் பரவியது. இவரது சக மாணவராக இருந்த வித்யாரண்யருக்கும் இவ்விஷயம் தெரிந்தது. அவர் அப்பொழுது விஜயநகர ஸாம்ராஜ்யத்து ஆஸ்தான வித்வானாக இருந்தார். அரசனிடம் அவருக்கு அதிகச் செல்வாக்கு இருந்தது. எனவே, எவ்விதமாகவாவது இந்த ஞானநிதியை வரவழைத்து தம்முடன் அரச சபையில் ஆஸ்தான வித்வானாக்கி, இவரது வறுமையை அகற்றிவிட வேண்டுமென்று எண்ணினார். அதற்கேற்ப ஒரு தூதுவனை இவரிடம் அனுப்ப, ஸ்வாமியும் தமக்குள்ள வைராக்யத்தைக் கூறுமாற் கூறி, 'வைராக்ய பஞ்சகம்' என்னும் ஒரு ஸ்தோத்ரத்தை எழுதி வித்யாரண்யருக்கு அனுப்பி வைத்தார். "உலகெலாம் ஆளும் ஆண்டவனுக்கு அடிமையாகிய நான், இந் நிலவுலகின் ஒரு சிறு பகுதிக்கு அரசனெனக் கூறிக் கொள்பவனுக்கு அடிமையாக மாட்டேன். அன்று குசேலனைக் குபேரனாக்கிய இறைவனையன்றி மற்றோரிடம் நான் அடிமை செய்யேன்" என்பன போன்ற வைராக்யக் கருத்துக்களைக் கொண்ட இவரது வைராக்ய பஞ்சகத்தைப் படித்த வித்யாரண்யர் 'இவரல்லவோ மகான்!' என மனத்தால் போற்றி மகிழ்ந்தார்.

## கனகம் பொழிவித்த கார்மேகம்

இப்படி ஏழ்மையையே உண்மைச் செல்வமாக ஏற்றிருக்கும் இந்த ஸ்வாமியின் ஞானத்தையும் வைராக்யத்தையும் கண்டு

பொறாமை கொண்ட சில அந்தணர்கள் இவரை அவமானம் செய்ய வேண்டுமென்று முடிவு செய்து, ஒரு பிரம்மசாரியை அழைத்து, 'விவாஹம் செய்து கொள்வதற்காகப் பண உதவி செய்ய வேண்டு மென்று நீ ஸ்ரீதேசிகனிடம் கேள்' என்று சொல்லியனுப்பினூர்கள். அவன் தேசிகனைத் தெண்டனிட்டு, தனது வறுமையையும் விவாஹம் செய்து கொள்வதற்கான பணத்தின் தேவையையும் கூறி, தனக்கு உதவி புரிந்தருள வேண்டுமென்று கெஞ்சினான்.

ஸ்வாமி தேசிகன், இது சிலரின் சூழ்ச்சி என்பதை நன்கு புரிந்து கொண்டார். ஆயினும் ஆண்டவனிடமுள்ள அசஞ்சல மான நம்பிக்கையால், ஜகந்மாதாவான ஸ்ரீ பெருந்தேவித் தாயார் ஸந்நிதிக்குச் சென்று, 'ஸ்ரீஸ்துதி' என்னும் தமது ஸ்தோத்ரத்தால் உருக்கமாகத் தாயாரைப் பிரார்த்தித்து நின்றார். தன்னலம் கருதாது பிறர் நலனுக்காகவே இந்த வைராக்யமூர்த்தி செய்த பிரார்த்தனைக்கிரங்கி, ஸ்ரீ மஹாலக்ஷ்மியும் பொன்மழை பொழிந் தாள். பிரம்மசாரியும் யதேஷ்டமாகப் பொன்களைத் திரட்டிச் சென்று திருமணம் புரிந்து கொண்டான். பொறாமைக்காரர்கள் தேசிகனின் திருவடி பணிந்து மன்னிக்க வேண்டினர்.

## பொறுமையின் எல்லை

பிறருடைய பொறாமைக் குணம் ஸ்வாமியின் பொறுமையை விளக்கிக் காட்டும் உரைக்கல்லாக அமைந்த நிகழ்ச்சிகள் பல. ஒரு சமயம் சில அற்பர்கள் ஸ்வாமி பிக்ஷைக்கு எழுந்தருளும் தெரு வழியில், சில செருப்புக்களைத் தோரணமாகத் தொடுத்துத் தொங்கவிட்டிருந்தனர். சுவாமி எவ்வித மனக்கசப்போ, முகச் சுளிப்போ இல்லாமல் அந்தத் தோரணத்தைத் தாண்டி, புன் முறுவல் பூத்த திருமுகத்துடன் இவ்வாறு கூறினாராம்:

"கர்மாவலம்பகா! கேசித் கேசித் ஜ்ஞாநாவலம்பகா: |
வயம் து ஹரிதாஸாநாம் பாதரக்ஷாவலம்பகா! ||

"சிலர் ஸம்ஸார துக்கங்கள் நீங்கி, கடைத்தேறுவதற்காகக் கர்ம மார்க்கத்தைப் பின்பற்றுகிறார்கள். சிலர் ஞான மார்க்கத்தைப் பின்பற்றுகின்றனர். நான் ஹரிதாஸர்களின் பாதரக்ஷைகளைப் பற்றுக் கோடாகக் கொண்டு கடைத்தேறுபவன்" என்று கூறித் தமது பொறுமையின் சிறப்பையும் பாகவத காஷ்ட்டையையும் உலகுக்கு அறிவுறுத்தினார்.

## வேதாந்த தேசிகன்

ஒரு சமயம் கவிதார்க்கிகஸிம்ஹம் ஸ்ரீரங்கம் எழுந்தருளி அங்கு சில நாள் தங்கியிருந்தார். அச்சமயம் பிற மதப் பண்டி தர்கள் சிலர் இவரை வாதுக்கழைத்தனர், அவர்களுடன் பல

நாட்கள் வாதப் போர் செய்து அவர்களை வெற்றி கொண்டார். அவர்களுடன் நடந்த வாதப் பிரதிவாதங்களின் தொகுப்பை 'ஶததூஷணி' என்னும் நூலாக உருவாக்கினார் தேசிகன். அதற்கு அரங்கநாதன் மனமுவந்து, 'வேதாந்த தேசிகன்' என்னும் சிறப்பான விருதை இவருக்குச் சூட்டினார்.

## ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரர்

இதை நோக்கிய அரங்கநாச்சியார் தாமும் இவருக்கொரு விருதமளிக்க விரும்பி, தம் மதத்திலும் பிற மதங்களிலும் தங்கு தடையின்றி புகுந்து ஆராய்ந்து உண்மையை ஒளிவு மறைவின்றி எடுத்துக் கூறும் இவரது திறமையை மெச்சி, 'ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரர்' என்னும் விருதமளித்து வாழ்த்தினார்.

இவ்வாறு அரங்க நகர திவ்ய தம்பதிகளால் வாழ்த்தப்பெறும் பெருமைபெற்ற வேதாந்த தேசிகனுடைய புகழ் நாடெங்கும் பரவியது. ஆய கலைகள் அறுபத்து நான்கிலும் தேர்ச்சி பெற்று 'ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்' என்று தெய்வ தம்பதிகள் அளித்த விருதைப் பொருளுள்ளதாகச் செய்துகொண்ட நிகழ்ச்சிகள் இவரது வாழ்நாட்களில் பல நேர்ந்தன. அவைகளில் சிலவற்றை மட்டும் இங்கு காண்போம்.

## 1. பாம்பாட்டியின் தோல்வி

சிலருடைய துர்போதனைக்கிணங்கி ஒரு பாம்பாட்டி இவரிடம் வந்து இவர் மீது சில பாம்புகளை ஏவினான். தேசிகன் தம் முன்னே ஏழு கோடுகளைத் தரையில் கீறினார். அவைகளைத் தாண்ட முடியாமல் பாம்புகள் பின்னடைந்தன. பிறகு அப் பிடாரன் 'சங்க பாலன்' என்ற மஹா சர்ப்பத்தை ஏவினான். அது அந்தக் கீற்றுக்களைத் தாண்டி ஸ்வாமியை நெருங்க, கருட தண்டகத்தால் பெரிய திருவடியைத் துதித்தார். அந்த க்ஷணமே கருட பகவான் சரேலென அப் பாம்பை எடுத்துச் சென்று மறைந்தார். கிடைத்தற்கரிய ஒரு மஹா ஸர்ப்பத்தை இழந்த அப் பிடாரன் தேசிகனின் திருவடி வணங்கி பிரார்த்திக்க, ஸ்வாமியும் 'கருட பஞ்சாஶத்' என்னும் ஸ்தோத்திரத்தால் கருத்மானை ஸ்தோத்ரம் செய்து சங்கபாலனை மீட்டுக் கொடுத்தார்.

## 2. கிணறு கட்டினார்

திருவஹீந்திரபுரத்தில் தேசிகன் தங்கியிருக்கும் காலையில் சில பொறாமைக்காரர்களால் ஏவப்பட்டு, ஒரு கொற்றன் தேசிகனிடம் வந்து, "உங்களுக்குக் கிணறு கட்டத் தெரியுமா? இது தெரியாமல்

எப்படி ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரானீர்கள்?' என்று கேட்டான். இதைச் செவியுற்ற தேசிகன் தலைப்பாகைக் கட்டி, கையில் கட்டடச் சாதனங்களுடன் கிணற்றில் இரங்கி, சற்றும் ஏறுமாறில்லாமல் அழகாகக் கற்களை அடுக்கி, கிணற்றைக் கட்டி, கொற்றனைத் திகைக்க வைத்துவிட்டார். அந்தக் கிணறு இன்றும் திருவயிந்தையில் தேசிகனது திருமாளிகையில் இருப்பதைக் காணலாம்.

## 3. மந்த்ரவாதியை ஜயித்தல்

ஸகல கலாநிதியாய் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரென எல்லோரும் போற்றும் நிலையிலுள்ள ஸ்வாமி தேசிகனைக் கண்டு பொறாமை கொண்ட ஒரு சந்நியாஸி, க்ஷுத்ரமந்த்ர ப்ரயோகம் செய்து தேசிகனின் வயிற்றில் 'ஜலோதரம்' என்னும் வியாதியுண்டாகும்படி செய்தான். ஸ்வாமி அதற்குச் சளைக்காமல் தம் எதிரே நிற்கும் கம்பத்தைக் கீறி அதன் வழியே தமது உதரத்திலேற்றிய நீரெல்லாம் வழிந்தோடும்படி செய்தார். அவனும் அவரை வணங்கி மன்னிக்க வேண்டினன்.

## 4. ஒரே யாமத்தில் பாதுகா ஸஹஸ்ரம்

ஸ்ரீ தேசிகனுக்கு அளிக்கப்பட்ட 'கவிதார்க்கிகஸிம்ஹம்' என்னும் விருதைப் பார்த்து பொறாமை கொண்ட ஒரு வித்வான் "ஒரு ராத்திரியில் ஸ்ரீ ரங்கநாதனுடைய திருவடியை வருணிக்கும் ஆயிரம் சுலோகங்களை நம் இருவரில் யார் இயற்றுகிறோமோ அவருக்குத்தான் 'கவிதார்க்கிகஸம்ஹம்' என்ற விருது பொருந்தும்" என்று கூறி, தாம் 'பதகமல ஸஹஸ்ரம்' இயற்றுகிறேன் என்று சொல்லிச் சென்றார். ஆனல், அவர் அந்த இரவு முழுவதும் முயற்சி செய்தும் முந்நூறு சுலோகங்களுக்குமேல் செய்யமுடியாமல் காலையில் ஸ்ரீ ரங்கநாதன் ஸந்நிதியில் வந்து நின்றார். ஸ்ரீ தேசிகனே ஸ்ரீ ரங்கநாதனுடைய திருவடிகளைத் தாங்கும் பாதுகைகளின் சிறப்பைப் பற்றி 'பாதுகா ஸஹஸ்ரம்' என்ற பெயருடன் பற்பல விருத்தங்கள், சித்திர பந்தங்கள், பத்ததிகள் முதலியவைகளைக்கொண்ட ஆயிரம் சுலோகங்களை அழகாகச் செய்து வந்து எம்பெருமான் ஸந்நிதியில் ஸமர்ப்பித்தார். இந்த ரஸமான—ஸ்தோத்ர ரூபமான காவியத்தைச் செவியுற்ற அந்த அந்தணர் தமது தோல்வியை ஒப்புக்கொண்டு தேவரீரே "கவிதார்க்கிக ஸிம்ஹம்" என்று போற்றிச் சென்றார்.

## 5. தந்தையின் திருவத்யயனம்

ஸ்ரீ தேசிகனின் திருத்தகப்பனரின் திருவத்யயன நாள். அதில் நிமந்த்ரணம் செய்யத் தகுதியுள்ள இருவரை ஸ்வாமி முன்ன

தாகவே ஏற்பாடு செய்திருந்தார். ஆனால், சில பொறாமைக் காரர்கள் நிமந்த்ரணத்தன்று அவர்களை அப்புறப்படுத்தி விட்டார் கள். ஸ்வாமி நித்ய கர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, அபராஹ்ணத்தில் நிமந்த்ரிதர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களை எதிர் பார்த்து அவர்கள் வராமையால் பகவானுக்கு நிவேதனம் செய்த பின், மூன்று இலைகளைச் சேர்த்து, பதார்த்தங்களைப் பரிமாறி ப்ரோக்ஷண பரிஷேசனாதிகளைச் செய்தபின் திரைக்கு வெளியில் வந்து அபிச்ரவண மந்த்ரங்களை ஸேவித்து வந்தார். என்னே ஆச்சரியம்! சிறிது நேரத்திற்கெல்லாம் மூன்று இலைகளில் இருந்த பதார்த்தங்கள் செவ்வனே புசிக்கப்பட்டு, வெளியில் வேடிக்கை பார்க்கும் துஷ்டர்கள் கண்களுக்கு மூன்று ஸ்ரீ வைஷ்ணவர்கள் வெளிக் கிளம்பிச் செல்வதுபோல் காணப்பட்டது. அந்த துஷ்டர் களும் தமது கர்வமழிந்து நின்றனர். அங்ஙனம் நிமந்த்ரணம் அமுது செய்தது ஸாக்ஷாத் ஹயக்ரீவனும், பேரருளாளனுமே என்பதை ஸ்வாமி அறிந்து பரமானந்தமடைந்தார்.

## 6. ச்ருதப்ரகாசிகையை ரக்ஷித்தார்

ஸ்ரீ பாஷ்யத்தின் வியாக்யானம் சுருதப்ரகாசிகை. இதை இயற்றியவர் சுதர்சன பட்டர் என்பவர். அவர் ஸ்ரீ ரங்கத்தி லிருந்தபோது, மகம்மதியர்களால் ஸ்ரீ ரங்கம் ஆக்ரமிக்கப்பட்டது. அப்பொழுது சுதர்சன பட்டர் முதலான பல பெரியோர்கள் துருஷ்கர்களால் கொல்லப்பட்டனர். அந்நிலையில் அங்கிருந்த ஸ்ரீ தேசிகன் சுதர்சன பட்டரின் இரு புதல்வர்களுடன், சுருத ப்ரகாசிகையையும் கர்நாடக தேசத்திலுள்ள ஸத்யாகாலத்திற்கு எடுத்துச் சென்று காப்பாற்றினார். ஸ்ரீ பாஷ்யத்தின் சிறந்த வியாக்யானமான சுருத ப்ரகாசிகையை ரக்ஷித்த பெருமை ஸ்ரீ தேசிகனையே சாரும்.

இப்படி எத்தனையோ ஸத்க்ரந்தங்களை இயற்றியும், ஸத்காரியங் களைச் செய்தும், தமது ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரத் தன்மையை உலகுக்கு எடுத்துக் காட்டிய ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிக னுடைய பெருமையை ஆயிரம் நா படைத்த ஆதிசேஷனாலும் வருணிக்க இயலாதெனில் மிகையாகாது.

## அவதார ஸமாப்தி

ஸ்ரீ தேசிகன் 102 ஆண்டுகள் இம் மண்ணுலகில் வாழ்ந்து ஒரு ஸௌமிய ஸ்ரீ கார்த்திகை மாதத்தில் தமது அவதார ஸமாப்தி யைச் செய்தார். ஆனால், இவ்வுலகமுள்ளளவும், இவர் அருளிய கிரந்தங்களாலும் இவர் காட்டிய நன்னெறியாலும் இவர் என் றென்றும் நம்மிடையே வாழ்ந்து வருவதாகவே நாம் கருதி, இவரடியைப் பின்பற்றுவோமாக.


ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்த கிரந்தங்களின் எண்ணிக்கை பின் வருமாறு :

| | | |
|---|---|---|
| (1) | ஸ்தோத்ரங்கள் | 28 |
| (2) | வேதாந்த கிரந்தங்கள் | 14 |
| (3) | வ்யாக்யாந கிரந்தங்கள் | 8 |
| (4) | ரஹஸ்ய கிரந்தங்கள் | 31 |
| (5) | தமிழ் ப்ரபந்தங்கள் | 24 |
| (6) | காவியங்கள் | 4 |
| (7) | நாடகம் | 1 |
| (8) | அநுஷ்டானக் கிரந்தங்கள் | 2 |
| | | 112 |

கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாண குணஶாலிநே ।
ஸ்ரீமதே வேங்கடேஶாய வேதாந்தகுரவே நம: ॥

## கண்டாவதாரம்

ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்த ஸங்கல்ப ஸூர்யோதயமென்னும் நாடகத்தில் காணும் பின்வரும் ச்லோகத்திலிருந்து ஸ்வாமியின் திருவாக்கினாலேயே இவர் வேங்கடேச கண்டாவதாரம் என்னும் கருத்து ஊர்ஜிதம் செய்யப்படுகிறது :—



“வித்ராஸிநீ விபுதவைரி வரூதிநீநாம்
பத்மாஸநேந பரிசாரவிதௌ ப்ரயுக்தா ।
உத்ப்ரேக்ஷ்யதே புதஜநை: உபபத்தி பூம்நா
கண்டா ஹரே: ஸமஜநிஷ்ட யதாத்மநேதி ॥”

(அதாவது, ப்ரஹ்மதேவன் பெருமாளை ஆராதிப்பதற்காக எந்த மணியை உபயோகித்தாரோ, எந்த மணியின் நாதம் அசுரர்களைப் பயந்தோடச் செய்ததோ அந்த மணியின் அவதாரமே இந்த நாடகத்தின் ஆசிரியர் (ஸ்வாமி தேசிகன்) என்று ஞானிகளான பெரியோர்கள் தகுந்த காரணங்களைக் கொண்டு ஊஹிக்கிறார்கள்.)

"ஸ்ரீ:"

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# ஸ்ரீ தேசிக திவ்ய ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம்

## த்யாநம்

அகிலபுவந ரக்ஷா ஸாதநாயாவதீர்ணே
குமதி கலிவிலாஸ த்வாந்த திக்மாம்ஶு ஜாலே ।
நிரவதி கருணௌப்தெள வேதசூடா குரௌ மே
பவது பரமபக்தி: ஸ்ரீநிதெள வேங்கடேஶே ॥ 1

அஸ்மத்தேஶிக தத்குரூந் ஶ்ருதி ஶிரஶ்
சூடார்ய ராமாநுஜௌ
ரங்கேஶம் ரகுபுங்கவாநுஜ குரும்
ஸ்ரீமந் நதார்த்திச்சிதம் ।
ஸ்ரீராமாநுஜ பூர்ண யாமுநமுநீந்
ராமாரவிந்தேக்ஷணௌ
நாத ஸ்ரீஶடகோப ஸைந்யரமணௌ
ஸ்ரீஸ்ரீபதிந் பாவயே ॥ 2

ஸ்ரீமத் த்ரயீ ஶேகர தேஶிகஸ்ய
நாம்நாம் ஸஹஸ்ரம் குணத: க்ரியாத: ।
ப்ரக்யாத மக்யாதி நிராஸி ஸர்வ
ஸம்பத்ப்ரதம் ஸாதுமுதே தநோமி ॥ 3

## ஸ்தோத்ராரம்ப:

வேங்கடேஶ க்ருபாலப்தாநந்தார்ய ஸ்வப்ந சிந்தித: ।
தோதாரம்பா கர்ப்ப ஸௌர்ய ஸங்க்யாப்தாவாஸ பாஸுர: ॥ 1

மதுஸூதந ரங்கேஶ ஸாகூதேக்ஷித ஜந்மக: ।
நபஸ்ய ஶ்ரவண ஸ்ரீஶ தீர்த்த வாஸர ஜந்மவாந் ॥ 2

தீபப்ரகாஶ நிகட ஸத்மாவிர்பாவ பாஸுர: ।
ஸ்ரீஶ கண்டாவதாரத்வ ஜ்ஞாபகாநேக யுக்திமாந் ॥ 3

புண்டரீகாக்ஷாக்ய யஜ்வ பௌத்ரோநந்தார்ய புத்ரக: |
ஆத்ரேய வாதிஹம்ஸாம்பு வாஹார்ய பகிநீ ஸுத: || 4

ஸ்வஸ்வ காலாநந்தகுரு க்ருத ஜாத க்ரியாதிக: |
அநந்தார்ய க்ருத ஸ்ரீமத் வேங்கடேஶாபிதாநக: || 5

வரதாசார்ய ராமாநுஜார்யோபாய க்ருபேக்ஷித: |
விஶ்வாமித்ராந்வயாப்தீந்துர் ஜகத்புண்ய மஹாபலம் || 6

அநந்தார்யாசார்ய ரத்ந க்ருதோபநய ஸம்ஸ்க்ருதி: |
வாதிஹம்ஸாம்புவாஹார்ய க்ருத தாபாதி ஸம்ஸ்க்ருதி: || 7

அதீத ஸாங்க ஸஶிரஸ்கா க்ருத்ரிம ஸரஸ்வதி: |
வாதிஹம்ஸாம்புவாஹார்ய ஸம்ப்ராப்தாகில ஶாஸ்த்ரதீ: || 8

கணாத தந்த்ர பாரீண ஆக்ஷபாதீய கௌதம: |
மீமாம்ஸா மாம்ஸலோ வ்யாகரண தந்த்ர பதஞ்ஜலி: || 9

காவ்யாலங்கார தத்வஜ்ஞ: கவிதார்க்கிக கேஸரீ |
யதிராஜ பதாம்போஜ த்வந்த்வ மாத்வீ மதுவ்ரத: || 10

யாமுநார்ய ப்ரேமமூர்த்தி: நாதயோகிஶ நாதவாந் |
பராங்குஶ பதாஸக்த: பரகாலாங்க்ரி பக்திமாந் || 11

ஸ்ரீபராஶர பட்டார்ய மேகஸூக்த்யம்பு சாதக: |
ஸ்ரீவத்ஸசிஹ்ந மிஶ்ரேந்து ஸூக்திஜ்யோத்ஸ்நா சகோரக: || 12

ஏகாந்தவாஸ ரஸிகோ த்வயசிந்தா பராயண: |
த்ரிராகக்நஶ் சதுஷ்பாண்டித்ய நிர்விண்ணைக மாநஸ: || 13

பஞ்சப்ரகார ஸந்துஷ்டி: ஷடூர்மி த்வம்ஸ கோவித: |
ஸப்த வ்யஸந தத்யாக தத்ஸ்வீகார விஶாரத: || 14

அஷ்டாங்க பக்திதி ரஷ்ட புஷ்பீஷ்டாஷ்டாங்க யோகக: |
நவவ்யாக்ருதி வித் ஸ்ரீபாஷ்யாத்ய பத்ய தஶார்த்தவித் || 15

ஶதாப்யதிக ஷட்பஞ்சாஶத் த்ரயீ மௌளி நீதிவித் |
ஸஹஸ்ராதிக்ருதி ந்யாய விவேசந துரந்தர: || 16

லக்ஷகோடி ஸ்வப்ரபாவாம்ஶாந்ர்ஹ பஜந ஸ்துதி: |
காமக்ரோதாதி நிகில துராத்ம குண வர்ஜித: || 17

பாரதாத்யுக்த ஸகல ஸதாத்ம குணபூஷித: |
ஶாஸ்த்ரோக்த ஸகலாசார்ய லக்ஷ்மாவாஸ வரஸ்தலீ || 18

ஸ்ரீவைஷ்ணவாநேக லக்ஷ்ம ஶோபித ஸ்வர்ணவிக்ரஹ: |
அகஸ்த்ய ஶாக ப்ரமுக ஸாத்விகாஹார பாஸுர: || 19

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸ்தாபநாசார்ய தல்லஜ: |
தேவநாயக பத்ராஶீரர்த்தாஹீந்த்ர புரஸ்திதி: || 20

தார்க்ஷ்யமந்த்ர ஜபப்ரீத தார்க்ஷ்யதத்த வரப்ரிய: |
தார்க்ஷ்ய தத்த ஹயக்ரீவ மநுப்ரீத ஹயாநந: || 21

வாகர்த்த ஸித்தித ஹயக்ரீவ ஸ்தோத்ர விதாயக: |
ஹயாஸ்யதத்த லாலாம்ருதாஸ்வாதந ஸுபோஷித: || 22

தார்க்ஷ்யாஜ்ஞா க்ருத தார்க்ஷ்யைக பஞ்சாஶத் ப்ரீததார்க்ஷ்யக: |
தேவநாயக பஞ்சாஶத் ஸ்துதி ஸம்பந்ந ஸத்யவாக் || 23

ப்ராக்ருதோக்த்யச்யுத ஶதா ப்ராக்ருதாநந்த ஸம்ஸ்துதி: |
ஸ்ரீமத் த்ரிமணி ஸம்ப்ரோத காதாஸர விதாயக: || 24

க்ருத கந்துக காத: குபேராக்ஷீ கீதிகாரக: |
குடிகா கீதி க்ருட் டோலா காதா க்ருதி விஶாரத: || 25

உபாலம்பாஹ்வய ஸ்ரீமத் காதாக்ருதி விசக்ஷண: ||
நவரத்ந ஸ்ரக் விதாதா பரதர்ஶந பங்கக்ருத் | 26

புராணோக்தாநேக தத்வ ஸ்ருஷ்டி க்ரம நிரூபக: |
பரகாலக்ருத ஸ்வர்ண பிம்ப ஸ்தேயா விரோதத்ருக் || 27

ஸ்வதந்த்ராஷ்டோத்தரஶத விரோத பரிஹாரவித் |
ரகுபுங்கவ கத்யஸ்ரக் க்ருதகோபால விம்ஶதி: | 28

கோபபூர் கதி பத்ராஶாஸந துஷ்ட த்ரிவிக்ரம: |
தேஹளீஶ ஸ்துதிப்ரீதாதிபக்த ஸ்துத மாதவ: || 29

ஹஸ்திஶைலேஶ பஞ்சாஶத் ஸ்துத நாகாசலேஶ்வர: ||
ஸ்ரீசிந்ஹமாலாஹ்வ க்ருதி ப்ரீத ஸஜ்ஜந மாநஸ: || 30

த்வாதஶாக்யாந காதாக்ருந் ந்யாஸகாதா விதாயக: |
அர்த்த பஞ்சக ஸங்க்ராஹி காதாக்ருதி விசக்ஷண: || 31

வைஷ்ணவாவஶ்யக திநசர்யா க்ரம விதாயக: |
ஸ்ரீஹஸ்திகிரி மாஹாத்ம்ய க்ருத் க்ருதாஷ்ட புஜாஷ்டக: || 32

யதோக்தகாரி ஸ்துதிக்ருத் க்ருத காமாஸிகாஷ்டக: |
ப்ரபத்தி தீபிகா ப்ரீத ஸ்ரீமத் தீபப்ரகாஶக: || 33

ப்ரபந்நாந்வஹ ஸம்பாவ்ய பரமார்த்த ஸ்துதிப்ரிய: |
ஸுதர்ஶநாஷ்டகோத்தூத ஶ்ரேயோபாதக ஸஞ்சய: || 34

ஸஜ்ஜநார்த்யாஶாஸநார்த்த ஷோடஶாயுத ஸம்ஸ்துதி: |
ஸ்ரீமத் வேங்கட நாதீய மங்களாஶாஸந ப்ரிய: || 35

தயாஶதக வீணைகீதிப்ரீத ஸ்ரீநிவாஸக: |
அயோத்யாத்யுத்தர திஶா திவ்யதேஶ கதிப்ரிய: || 36

காஞ்சீ மாயி யதிக்ஷுத்ர நிராஸி ஸ்தம்பலேகந: |
வித்யாரண்ய சமத்கார தாயி வைராக்ய பஞ்சக: || 37

க்ருத ஸேஶ்வரமீமாம்ஸோ மீமாம்ஸா பாதுகாக்ருதி: |
பட்டாதி ஸௌத்ர துர்வ்யாக்யா நிராகரண தக்ஷிண: || 38

பரிஸங்க்யாக்ய வித்யர்த்த நிருபண துரந்தர: |
ஸ்ரீரங்கநாத ஸேநேஶ ஶாஸநோத்தம்ஸந ப்ரிய: || 39

பட்டாரகா த்யுக்தரீதி ரங்கி ஸேவாக்ரமோத்ஸுக: |
பகவத் த்யாந ஸோபாந வர்த்தித ஸ்ரீஶபக்திக: || 40

ஶததூஷண் யபக்ராந்த மாயி துர்வாதி கர்வக: |
நிர்விஶேஷ ப்ரஹ்மஶப்த முக்யாமுக்யார்த்த பங்கக்ருத் || 41

நிர்விஶேஷ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸ்யத்வ பஞ்ஜந தக்ஷிண: |
கர்மப்ரஹ்ம விசாராத்ம மீமாம்ஸைக்ய விதாயக: || 42

விதாநாநர்ஹ வாக்யார்த்த ஜ்ஞாநஹேதுத்வ பஞ்ஜக: |
உபாஸநா ஹேதுவேத்தா பாதாநுஸ்ருதி பாதக: || 43

யஜ்ஞாதி ப்ரஹ்ம விவிதிஷா ஹேதுத்வ நிரோதக: |
ஶாப்தாபரோக்ஷஹா தூத பூர்வவ்ருத்த சதுஷ்டய: || 44

மாயி வாதாதிகாரக்நோ நிர்விஶேஷாத்ம பாவஹா |
நிர்விஶேஷ பராலம்பி நிர்விகல்பக பஞ்ஜந: || 45

ஸந்மாத்ராத்யக்ஷரோத்தா பேத தோஷோத்தார கோவித: |
பரவேதாப்ரமாணத்வ த்ருக் த்ருஶ்யத்வாநுமாநஹா || 46

வ்யாவர்த்தமாந பாவாநு மாந ரோதந தத்பர: |
மாயித்ருக் த்ருஶ்ய ஸம்பந்த நிராஸைக விசக்ஷண: || 47

மாயி பாஹ்ய ப்ரகாஶாநுபபத்தி ஸ்தாபந க்ஷம: ||
ப்ரஹ்மாஶ்ரயாஜ்ஞாந ஹந்தா ப்ரஹ்மாவேத்யத்வ
பஞ்ஜக: || 48

ஜ்ஞாநாஜந்ம நிராக்ருத் தீ நிர்விகாரத்வ மாநஹா |
தீ நாநாத்வ விரோதிக்நோ நிர்விஶேஷாநுமாநஹா || 49

ஸம்விதாத்மத்வ ஹந்தா ஹமர்த்தாத்மத்வ நிருபக: |
ஜ்ஞாத்ருத்வாத்யாஸ ஹந்தா ச ஸாக்ஷிபஞ்ஜந தத்பர: || 50

ஶாஸ்த்ராத்யக்ஷ விரோதஜ்ஞோ ऽந்ருதாஸாத்ய ருதார்த்தவித் |
ஜீவந்முக்தத்வஹா பாத ஸாமாநாதிகரண்யஹா || 51

ஸம்வி தத்வைதஹா மாய்யுபதேஶாநுபபத்திவித் |
நிர்விஶேஷ திரோதாந ஹந்தாத்மாத்வைத பஞ்ஜக: || 52

ஜீவேஶ்வரைக்ய வாதக்நோऽகண்ட வாக்யார்த்த பாதக: |
பாவரூபாஜ்ஞாந ரோத்தா ஜீவாஜ்ஞாந விநாஶக: || 53

அவித்யாநுபபத்திஜ்ஞோ மாயாவித்யா விபாகஹா |
குத்ருஷ்டிஸ்த ஸம்ஸார நிவர்த்தக நிவர்த்தக: || 54

நிவ்ருத்யநுபபத்திஜ்ஞ: ஶப்தாவேத்யத்வ பஞ்ஜக: ।
நிஷ்ப்ரபஞ்ச நியோகக்நோ விகல்பாமாநதா ப்ரிய: ॥ 55

உபப்ரும்ஹண வைகட்ய யுக்ததுர்மத வேதிதா ।
ஐக்யோபதேஶாந்ய தோபபத்யஸம்பவ பாதக: ॥ 56

குத்ருக் ஶாஸ்த்ராதிகாரக்நோ முக்ததத்வேத்ய தத்வவித் ।
ஸகுணகுண வேதாந்த வ்யவஸ்தா கரண க்ஷம: ॥ 57

ப்ரஹ்மோபாதாநவிந் மாயோபாதாநத்வ நிராஸக: ।
கார்யா த்யநுபபந்நத்வ பரிஹார விசக்ஷண: ॥ 58

ப்ரஹ்மாநந்தத்வ மதிநிர் விஶேஷாநந்த பஞ்ஜக: ।
நிர்விஶேஷ ப்ரஹ்மநித்ய பாவ பஞ்ஜந தக்ஷிண: ॥ 59

அத்விதீய ஶ்ருதிவ்ராத விஸம்வாத விசாரக: ।
ஸத்வாஸத்வ விவேக்தா ஜீவைக்ய பங்க விசக்ஷண: ॥ 60

குத்ருக்பக்ஷாபஶாஸ்த்ராதி கரண வ்யாஹதி ப்ரிய: ।
அதிகாரி விவேகஜ்ஞோ யதிலக்ஷ்ம விவேசக: ॥ 61

அலேபக மதச்சேத்தா மாயி ஸூத்ரார்த்த பாதக: ॥
தஶாவதார ஸ்தோத்ராக்ய ஜகந்மங்கள காரக: ॥ 62

ஸ்வப்நபாஷ்ய க்ருதாஜ்ஞப்த வேதகூடா ப்ரவர்த்தந: ।
யதீந்த்ர ஸப்தத்யாக்யோபசார ஶ்ருத்யந்த தீபக்ருத் ॥ 63

பக்திப்ரகர்ஷ விஹித ஸ்ரீ பூ கோதாஸ் துதி ப்ரிய: ।
ரங்கேஶாஜ்ஞா க்ருதந்யாஸ திலகஸ்தோத்ர ரத்நக: ॥ 64

ஸ்ரீரங்கநாத தத்த ஸ்ரீ வேதாந்தாசார்ய நாமக: ।
ரங்கேஶ்வரீ தத்த ஸர்வ தந்த்ர ஸ்வாதந்த்ர்ய பூஷித: ॥ 65

அயத்நக்ருத வாதித்ரய கண்டந நிபந்தந: ।
தத்வடீகா வ்யாக்ருத ஸ்ரீமத்பாஷ்யாம்ருத ஸாகர: ॥ 66

வாஜிஶாகா ஶிகா வ்யாக்யா க்ருதி ஸம்ப்ரீத மாநஸ: ।
தாத்பர்யசந்த்ரிகா ஸூஸ்த்த கீதாபாஷ்ய மஹாபத: ।  67

யாமுநார்யோக்த கீதார்த்த ஸங்க்ரஹ த்ராணகாரக: ।
பிஷ்டபஶ்வாதி காதோக்தி வ்யவஸ்தா கரணக்ஷம: ॥ 68

ப்ரத்வம்ஸ ப்ராகபாவாதி வ்யவஸ்தா கரணக்ஷம: ।
வைதஹிம்ஸா ஽ஹிம்ஸதா ஸ்தாபந நீதிஸூநீதிக: ॥ 69

முமுக்ஷூஸூக்த வாகாதி பலோக்திதநீதிவித் ।
அவாப்த ஸர்வகாமத்வ குணநிர்ணய கோவித: ॥ 70

கைவல்யாக்ய புமர்த்த ஸிவ ரூபாநித்யத்வ ஸாதக: ।
ஸாங்க கர்ம ஜ்ஞாந பக்தி யோகாவத்ருதி கோவித: ॥ 71

விபூதி விஶ்வரூபாதி விரோத ஶமநக்ஷம: ।
ஆத்மாநாத்ம குணக்ஷேத்ர தஜ்ஜ்ஞ ஶோதந தக்ஷிண: ॥ 72

புருஷோத்தம தேவாஸுர விபாக நிருக்திவித் ।
கர்த்ரு கர்மாதி ஸத்வாதி குணநீத விபாகவித் ॥ 73

ஏகாயநோக்தா ஸௌயாவிர் பாவ வ்யாக்ருதி தக்ஷிண: ।
உச்சிஷ்டாதந ஹேத்வார்ய பேதநிர்ணய கோவித: ॥ 74

ஸ்த்ரீஶூத்ர பகவத்பூஜா தாந்த்ரிகத்வாபிதாயக: ।
ஸ்வபராதீநதா யத்த ஶாஸ்த்ர வைய்யர்த்ய பாதக: ॥ 75

தத்வமுக்தா கலாபஸ்ரக் க்ருதஸர்வார்த்த ஸித்திக: ।
க்ருதாதிகரண ஸாராவள்யாக்ய க்ரந்தஶிகாமணி: ॥ 76

ஸாராவளீ வ்யாக்ரியாதி கரணதர்ஶ காரக: ।
ஸ்ரீமந் ந்யாய பரிஶுத்தி விஶுத்தீக்ருத மாநஸ: ॥ 77

ந்யாய ஸித்தாஞ்ஜநோதஞ்சந் மேய யாதாத்ம்ய போதந: ।
ஆக்ஷபாதீய ஸூத்ரார்த்த பரீக்ஷாகரண தீக்ஷித: ॥ 78

அக்ஷபாத சமத்கார தாயி ஸூத்ர ஸமூஹக்ருத் ।
வ்யாஸாக்ஷபாத ஸூத்ரார்த்த விரோத பரிஹாரவித் ॥ 79

த்ரவ்யாத்ரவ்ய பிதா தத்தல் லக்ஷணோக்தி விசக்ஷண: ।
த்ரைகால்யாநேக ஸித்தாந்த நிராஸா ஸம்பவாந்தக: ॥ 80

ரூபாதி பஞ்சகாதாரா பாவ வாத நிராஸக: ।
தர்மதர்மித்வாபலாப வாதத்வாந்த திவாகர: ॥ 81

ப்ருதிவ்யாதி சதுர்த்ரவ்ய மாத்ர பக்ஷ விபேதிதா ।
த்ரிகுணேந்த்ரிய வர்கா நத்யக்ஷ பாவ விதாயக: ॥ 82

ப்ரக்ருத்யாகம கம்யத்வ ஜகந்மூலத்வ போதக: ।
சதுர்விம்ஶதி ஸங்க்யாக தத்வஸ்ருஷ்டி ப்ரகாரவித் ॥ 83

ஸாங்க்யாதி ஹைதுகோந்நீத ஸ்ருஷ்டி தத்தேது பாதக: ।
அஷ்டகரண பஞ்சீக்ருதி த்ரிவ்ருத்க்ருதி விபேதவித் ॥ 84

அந்த்யாவயவிஹா ஽ந்யூநா நுத்க்ருஷ்ட பரிமாணவித் ।
ஶரீரோத்பத்யுபாதாநைக பூதோக்தி நிராஸக: ॥ 85

ஸாங்க்ய ஸத்கார்ய வாதக்ந: க்ஷணிகத்வ மதாந்தக: ।
க்ஷணோபாதி விஶேஷஜ்ஞோ ஹேது ஸாத்யாபலாபஹா ॥ 86

ப்ரதிஸங்க்யா ப்ரதீஸங்க்யா நிரோத மதபஞ்ஜக: ।
அக்ஷபூத விகாரத்வ ஸாதக ப்ராணநாஶந: ॥ 87

பூதேந்த்ரியாப்யாயகத்வ நிர்த்தாரண விசக்ஷண: ।
அந்த:கரண நாநாத்வ பாஹ்யாக்ஷைக்ய நிராஸக: ॥ 88

மநோவ்யாபித்வ நித்யத்வ ஹேந்த்ரியாணுத்வ வேதிதா |
சக்ஷுராதி ப்ராப்யகாரி பாவஸாதந தக்ஷிண: || 89

ஶப்ததேஶ ச்ரோத்ர கார்யக்ருத்வாபிதாயக: |
ஸ்வதேஶாகத வ்ருத்தித்வ நிக்ராஹி ஶ்ரோத்ரபாதக: || 90

வ்யோமாத்யக்ஷத்வ நிர்ணேதா காவகாஶோபகாரவித் |
ஆகாஶாவரணாபாவ மாத்ரபாவ விபஞ்ஜக: || 91

ஆகாஶ நித்யத்வ விபு பாவ வாத விநாஶக: |
திக்வஸ்து ஸாதகச்சேத்தி திக்வ்யோமாபேத ஸாதக: || 92

ராஜஸாக்ய மஹத்தத்வா பிந்ந ப்ராண விபஞ்ஜந: |
ப்ராணாக்ஷத்வா வாயுபாவ வாதநிஹ்நவ தக்ஷிண: || 93

வைஶ்வாநர ஸ்வரூபாதி நிரூபண விசக்ஷண: |
தேஜோ தர்ம ப்ரபாதேஜோ பாவஸாதந தத்பர: || 94

ப்ரபா தீபாத்யவயவ பாவாபாவ விதாயக: |
ப்ரபாவிஷய பாஷ்யோக்தி விரோதி ஶமநக்ஷம: || 95

ஸ்திராஸ்திராக்ய தேஜோ விபாகஜ்ஞாந விசக்ஷண: |
தம ஆலோக விரஹத்வாபாவ ப்ருதிவீத்வவித் || 96

ப்ருத்வீபதந ப்ருத்விப்ரமண வாத விநாஶக: |
காலஸ்வரூப கேஶாந்ய பாவஜ்ஞாந துரந்தர: || 97

காலாநுத்பத்யக்ஷகம்ய பாவஸ்த்தாபந தத்பர: |
காலஸர்வ வ்யாபகத்வ ஸர்வஸாதகதாப்ரிய: || 98

ஆத்மாங்க மாநஸாக்ஷஜ்ஞாநாதிபேத ப்ரஸாதக: |
ஆத்மப்ரத்யக்த்வ கர்த்ருத்வ ஸ்வப்ரகாஶத்வ ஸாதக: || 99

யத்நவைபல்ய ஹர்தோபாதிக ஜீவேஶ பேதஹா |
ஸ்வாபாவிகேஶ ஜீவாத்ம பேதாபேத மதாந்தக்ருத் || 100

ஏகதந்வேக ஜீவாத்ம மாத்ரபக்ஷ விதாரண: |
ப்ரஹ்ம ப்ரதிச்சந்த ஜீவ வாதபஞ்ஜந தக்ஷிண: || 101

சதுர்விதாத்மாநித்யத்வ வாதப்ராண விநாஶந: |
ஜீவாத்மாநித்யத்வ விபு வாத பஞ்ஜந தத்பர: || 102

ஜீவைககால நைகாங்கா திஷ்டாத்ருத்வாபிதாயக: |
ஜீவ வ்யாபித்வோபபத்திஹா ஜீவாணுத்வ ஸாதக: || 103

தேஹதுல்ய பரிமாண ஜீவவாத விநாஶக: |
நித்யஸம்ஸாரி ஸதஸத் பாவஸ்த்தாபந தத்பர: || 104

மோக்ஷோபாய ஸுதுர்ஜ்ஞாந பாவவாத விபஞ்ஜந: |
அபவர்கார்த்தி ஸத்தேது வித்யா நாநா விபாகவித் || 105

க்ரியா வித்யோபகாரித்வ ப்ரகாரஜ்ஞாந கோவித: |
க்ரியாவித்யா கர்த்ரு ஸம்ஸ்காரத்வ வாத விநாஶக: || 106

ஸர்வாஶ்ரமி ப்ரஹ்மவித்யாதிக்ரியா ஸ்தாபந க்ஷம: |
கர்மவித்யாஶ்ரமாங்கத்வ நித்யத்வாதி விபாகவித் || 107

ப்ரவ்ருத்யாக்ய நிவ்ருத்யாக்ய கர்மபேத ஸ்வரூபவித் |
த்ரைவர்ணிகாதிகரணே ஸர்வாதிகார பேதத்ருக் || 108

தத்வமஸ்யாதி புவந பாதகத்வ விநாஶக: |
ஜகந்நிவர்த்தக ஜ்ஞாந நிவர்தக நிவாரக: || 109

ஜகந்நிவர்த்தக ஜ்ஞாந வேத்யாபாவ விதாயக: |
ஜகந்நிவர்த்தக ஜ்ஞாநாதாராபாவ விதாயக: || 110

ப்ரஹ்மவித்யா பந்தநாஶ காரணத்வோபபத்திவித் |
வித்யாநாஶ்ய த்ரிவர்காதி ஸுக்ருதோக்தி விசாரக: || 111

அஶ்லேஷோத்தர காம்யார்த்த புண்யஸம்பவ வேதிதா |
விரஜோத்தர தீராந்த த்யக்த துர்வாஸநோக்திமாந் || 112

முக்தபுத்தி விகாஸோத்தர ஸீமாபாவ ஸாதக: |
முக்தாத்யைச்சிக தேஹாதி யோகவர்ணந தத்பர: || 113

முக்தாதீச்சா விகாதாபாவ ஸ்தாபந விசக்ஷண: |
நிர்துக்க முக்தாநுபவ வேதீ நித்யாக்ய ஸூரிவித் || 114

தேவதாந்தர தாதாத்ம்ய முக்திவாத தமோநுத: |
மதாந்தரஸ்த ஸாயுஜ்ய ஶப்தார்த்தாநுபபத்திவித் || 115

முக்தாத்ம புநராவ்ருத்தி ப்ரஸங்க பரிஹாரக: |
வைஶேஷிகாதி பாஷாண துல்ய மோக்ஷோக்தி வாரக: || 116

ஸாங்க்யாபிமத ஸம்ஸார மோக்ஷபக்ஷ நிவாரக: |
மதாந்தரஸ்த்தாபிமத மோக்ஷவைவித்ய வாரக: || 117

ஈஶவேதைக கம்யத்வ வேதாபாத்யத்வ ஸாதக: |
உபதேஶாநு மாநேஶாநுமாந தமந க்ஷம: || 118

ஶாஸ்த்ர யோநித்வ ஸாங்க்யாதி க்ருதித்வய விரோதஹா |
நிமித்ததோபாதாநத்வ த்வயைகாதார வேதிதா || 119

ஸூக்ஷ்ம ஜீவாசித் விஶிஷ்டே ஶோபாதாநத்வ ஸாதக: |
மதாந்தரஸ்த்த ப்ரஹ்மோபாதாநத்வோக்தி நிவாரக: || 120

ஜீவாசிதீஶ விக்ருதிமத் ப்ரஹ்மோக்த்யபநோதந: |
ஸர்வாநுவ்ருத்த ஸந்மாத்ர ப்ரஹ்மத்வோக்தி விபஞ்ஜக: || 121

ஜீவாதி பரிஞமீஶ ஜைநகந்தி மதாந்தக்ருத் |
ப்ரஹ்மோபாதிக ஜீவத்வ பாஸ்கரோக்த்யபஹாஸக: || 122

அவித்யாஸஹித ப்ரஹ்ம விவர்தோக்த்யுபரோதக: |
மதாந்தரஸ்தாவித்யாவ லோகநாநுபபத்தி த்ருக் || 123

ப்ரஹ்மஜ்ஞாநாநுமா ஶ்ரௌத பாதோதாஹரண க்ஷம: |
மாயாதிபத ஸத்ப்ரஹ்ம தோஷஜ்ஞாபகதாபஹ: || 124

அவித்யா ஸாதகாஜ்ஞாந கார்யமித்யாத்வ ஸாதக: |
கார்யோபாதாந ஸாத்ருஶ்ய நியமோக்தி விபஞ்ஜக: || 125

ஜகந்மித்யாத்வாநுமாந பஹுவ்யாஹதி போதக: |
அநித்ய மித்யா பாவ ப்ர க்லுப்தி பங்க விதாயக: || 126

பேதா த்யக்ஷ விருத்தார்த்த நிஷேத ஶ்ருதி போதக: |
அபரோக்ஷாபாத்யதா யோக்யா யோக்ய ப்ரத்யக்ஷ வேதிதா || 127

மாயி ஶாஸ்த்ராத்யக்ஷமூல தோஷ ஸாம்யோபபாதக: |
துல்யதோஷ ப்ரமாணாந்யோந்ய ஸம்பாத கதாபஹ: || 128

ஶாஸ்த்ரைக வேத்யாநத்யக்ஷ நாநாபேதோபபாதக: |
மாயி பௌத்தாதி ஸாம்யாபாதந நிர்வஹண க்ஷம: || 129

மாயி பக்ஷாநேக பாதக விகல்பாபிதாயக: |
பர ஶாஸ்த்ரா நுபபத்தி பரிஹார விசக்ஷண: || 130

ஈஶ தேஹாதி பஞ்சாபா க்ருதிவாத நிராஸக: |
தேவாதி விக்ரஹாபாவ வாதவ்ராத நிராஸக: || 131

வ்யூஹாதி பஞ்சரூபேஶ பூர்ணஷாட்குண்ய வேதிதா |
ஈஶவ்யூஹ விஶேஷாபி மாநித்வ பரிஹாரக: || 132

ஈஶாத்மாசார்ய ஶிஷ்யத்வாபிநீதி பல ஸாரவித் |
ஈஶ சித்ராநேக வ்ருத்தாந்த விஶேஷாதி தத்வவித் || 133

ஈஶ ஸர்வஜ்ஞ பாவாநுபபத்தி விநிவாரக: |
ஸர்வேஶ ஸர்வஶக்தித்வ ஸ்வேச்சாவத்வா பிதாயக: || 134

தீஸ்வபாஸ்யத்வ நித்யத்வ த்ரவ்யத்வ ஸ்த்தாபந க்ஷம: |
புத்யவேத்யத்வ நித்யாநுமேயத்வ மதபஞ்ஜக: || 135

ப்ரமாவிபர்யயத்வாபர தர்கோஹ ஸ்வரூபவித் |
ப்ரமாண லக்ஷணஜ்ஞஸ் ஸத் க்யாத்யர்த்த க்யாதிபாதக: || 136

அந்யதாக்யாதி ஸந்த்யாக ஸ்வீகாரத்வய ஸாதக: |
ஸந்தேஹ யாதார்த்யவேத்தா ऽநிர்வாச்யக்யாதி பங்கக்ருத் || 137

அநிர்வச ஸ்வரூபாதி ரஜதோத்பத்தி பஞ்ஜக: |
புத்தோக்த நிரதிஷ்டாந க்யாதிவாத நிராஸக: || 138

அநௌபாதிக துச்சக்யாதிவாத ப்ராண நாஶக: |
யோகாசார ப்ரஹர்த்தா ச ஹ்யக்யா த்யநுபபத்திஹா || 139

ஆத்மாகார ஜ்ஞாநஹர்த்தா ஹ்யாத்மக்யா த்யபஹாரகঃ ।
நிராலம்பந விஜ்ஞாநா நுமாபஞ்ஜந தக்ஷிண: ॥ 140

பாஹ்யபாஹ்ரெளபாதிகா ஸத்க்யாதி ஸாதந விபஞ்ஜநঃ ।
தீகதார்த்தோத்பவார்த்தாகார வாத பரிஹாரகঃ ॥ 141

ஹரித்ரா சூர்ண நீத்யர்த்த தீ யோகோத்தாக்ருதி த்விஷத் ।
ஸௌகதோக்தா நதிஷ்டாந க்யாதிவாத நிரோதக: ॥ 142

அநாலம்ப க்யாதிஹந்தா ஸ்ம்ருதிஜ்ஞாந ஸ்வரூபவித் ।
ப்ரத்யக்ஷ லக்ஷணஜ்ஞாதா திவ்யார்ஷாத்யக்ஷ ஸாதகঃ ॥ 143

வைஶிஷ்ட்யா கோசரஜ்ஞாந மதச்சேதந தீக்ஷித: ।
ஸம்ஜ்ஞாநுவித்த ஸர்வார்த்த புத்திஶப்தாத்யபாதஹா ॥ 144

யோகி ப்ரத்யக்ஷாநுமாந தூஷணோத்பாவந க்ஷமঃ ।
மாநஸாத்யக்ஷ பங்கஜ்ஞஸ் ஸந்நிகர்ஷ ஸ்வரூபவித் ॥ 145

அலௌகிகாக்ய ஸம்பந்த ப்ரத்யக்ஷ மத பாதகঃ ॥
அநுமாநாத்யக்ஷமாந பஹிர்பாவ விதாயக: ॥ 146

அநுமா மாநதா லக்ஷ்மஜ்ஞோ ऽநுமாபாதி தர்கஹா ।
அநுமாநத்வாபரோத்தார ப்ரகார விதக்ரணீ: ॥ 147

உபாதி லக்ஷணோபாதி விதூநந விஶேஷவித் ।
வ்யாப்தி ஸ்வரூப வ்யாப்தி க்ராஹக மாந விசாரகঃ ॥ 148

வ்யாப்தி க்ரஹ ப்ரகாரஜ்ஞாதா வ்யாப்த்யாதி விபாகவித் ।
கேவலாந்வய் யநுமாந விஶேஷஜ்ஞாந ஸாதக : ॥ 146

மஹாவித்யா நிராஸோத்த விரோத பரிஹாரகঃ ।
கேவல வ்யதிரேக்யா க்யாநுமா பஞ்ஜந தக்ஷிணঃ ॥ 150

லக்ஷண ஜ்ஞோந்யவாத்யுக்த லக்ஷணார்த்த த்வயாபஹா ।
ஸ்வபரார்த்தாநுமா ப்ராஜ்ஞோ ந்யாயாவயவ வேதிதா ॥ 151

நிக்ரஹஸ்தாந ஹேத்வாபாஸ ஜாதிச்சல வேதிதா ।
வாதஜல்ப விதண்டாஜ்ஞோ மாநாபாஸ விவேசக: ॥ 152

அநுமாநாத்யக்ஷ பாஹ்ய ஶப்தமாந ப்ரஸாதக: ।
ஆகாங்க்ஷா யோக்யதா ஶக்தி வாக்யார்த்த ஸஹகாரிவித் ॥ 153

பதவாக்ய ஸ்வரூபஜ்ஞோ ऽந்விதாபிவதநோத்ஸுக: ।
அபிஹிதாந்வய ஜ்ஞாதா விஶிஷ்ட பத ஶக்திவித் ॥ 154

விபக்த்யாக்யாத தாதூப ஸர்க தத்தித வேத்யவித் ।
ஸமாஸாந்வய க்ருந் முக்ய ப்ரத்யயார்த்த விஶேஷவித் ॥ 155

ஶாப்த போதாகார வேத்தா லக்ஷணாபத வ்ருத்திவித் ।
விஶேஷ்ய முக்ய வ்ருத்தா ப்ருதக்ஸித்த பதஶக்திவித் ॥ 156

பகவத் ஸர்வ ஶப்தாபிதேயத்வ ஸ்தாபந க்ஷம: |
தத்வமஸ்யாதி வாக்யார்த்த நிரூபண விசக்ஷண: || 157

ஶாப்தோக்த ஶப்த ஸாமாநாதிகரண்யார்த்த வேதிதா |
ப்ரமோத்பத்தி ப்ரமாஜ்ஞப்தி ஸ்வதஸ்த்தோத்பாவந க்ஷம: || 158

வேத ப்ரவாஹ நித்யத்வ வேதேஶாஜ்ஞநி தத்வவித் |
வித்யர்த்த வாத மந்த்ராதி ததர்த்தாவத்ருதி க்ஷம: || 159

பாஷாமந்த்ர வ்யவஸ்தாவிந் மந்த்ராவாந்தர பேதவித் |
அத்ரவ்யமாநவித் ஸத்வா ஸத்வ ஶப்தோக்தி பாதக: || 160

ஜநநாதி ம்ருஷாத்வோக்தி மதச்சேதந தத்பர: |
த்ரவ்யாத்ரவ்யாநு மேயாத்யக்ஷபேதாபேதவாரக: | 161

பேதபாதக நிஸ்தாராத்ரவ்யேயத்தாவதாரக: |
ரஜஸ்தமஸ் ஸத்வகுணோபயோகா த்ரவ்யதோக்திமாந் || 162

ஸத்வாத்யவஸ்த்தா வைசித்ர்யாநந்த்ய நிர்ணய கோவித: |
ஶப்தாதி க்ராஹகாதார நியமோக்தி விசக்ஷண: || 163

ஶப்தாதி குணயுங்நித்ய விபூதி வ்யாக்ருதி க்ரம: |
ஸர்வ பூதாஶ்ரிதத்வாநா த்ரவ்யத்வ ஸ்தாபந க்ஷம: || 164

ஶௌகதோக்த த்வாநஜைந ஶப்த புத்கல வாதஹா |
வர்ண வேதாநித்ய நித்யத்வ ப்ரகாராவதாரக: || 165

அநுஷ்ணஶீத ஶீதோஷ்ண ஸ்பர்ஶாதார விஶேஷவித் |
பூதபஞ்சக வர்ணோக்தி நிர்வோடா ரூபபேதவித் || 166

சித்ரரூப மதச்சித் ஸ்நேஹ குணாந்தர பாதக: |
நிராக்ருத குருத்வ த்ரவத்வாக்யாந்ய குணத்வய: || 167

குருத்வாகம நிர்வோடா குருத்வாத்யக்ஷ லிங்கநுத் |
ஏகத்வ த்வித்வ ஸங்க்யாதி குணாந்தர நிராஸக: || 168

பரிமாண ப்ருதக்த்வாக்ய குணாந்தர நிராஸக: |
நித்யாநித்யாக்ய ஸம்யோக ஸ்தாபநைக விசக்ஷண: || 169

பராபர விபக்தத்வ குணத்ரய நிராஸக: |
விஷயாலம்பிதாபேத திவைஷம்யாவதாரக: || 170

முக்தபுத்தி ஜகத் வ்யாப்ததோபபத்தி நிரூபக: |
யோகிபுத்தி விநஷ்டைஷ்யத் கோசரத்வோபபாதக: || 171

அத்ரவ்ய நித்யதீ பக்ஷ விஷயித்வாதி பாதக: |
திவிகார த்வேஷராக ஸுகதுக்க ப்ரயத்நத்ருக் || 172

த்யக்த ஜீவந யோந்யாக்ய யத்நப்ராகட்ய தர்ஶந: |
பகவத் ப்ரீதிகோபாந்ய தர்மாதர்ம மதாந்தக: || 173

ப்ரயோநாக்நீஷோம ஸவஷம்ப ஸாதனைக விசக்ஷண : ।
மந்த்ரஸ்வார்த்த பரத்வோக்தி விரோத பரிஹாரவித் ॥ 174

தேவதாமுக ஸம்ஸித்த பகவத்ப்ரீதி ஸாதக : ।
ஸம்ஸ்கார கர்ம பகவத் ப்ரீத்யர்த்தத்வ ப்ரஸாதக ॥ 175

அபூர்வவிதிவாச்யத்வ ப்ராதாந்ய பஹுதோஷவித் ।
வக்த்ரபிப்ராய தேவப்ரஸாத விவாச்யதா ஸுதீ ; ॥ 176

ஸம்ஸ்காராக்ய குணச்சேத்தா கர்மாக்யார்த்த ஸ்வரூபவித் ।
ஸம்ஸ்த்தாநோத்தீர்ண கோத்வாதி ஸாமாந்யமத பஞ்ஜக ॥ 177

ஜாதிவாதாநேகவாதி ஸமீரித நிராஸக : ।
ஸாத்ருஶ்யாதி பதார்த்தாந்தர க்லுப்தி ப்ராணநாஶந ॥ 178

அநேக ஶந்யாவயவாநுவ்ருத்தி வ்யவஹாரவித் ।
விஶேஷ ஸமவாயாக்ய பதார்த்தாந்தர பாதக : ॥ 179

அபாவ பாவரூபத்வ ஸ்வபாவேயத்வ போதக ।
ராமாநுஜீய ஸித்தாந்த ஸர்வோத்க்ருஷ்டத்வ ஸாதக ॥ 180

ஸச்சரித்ர த் ண ஸம்யக் த்ராத ஸந்மார்க ஸந்ததி : ।
கிலாத்யக்ஷ ஶ்ருதி ஸ்தாபித சக்ராங்கந ஸம்ஸ்க்ருதி: ॥ 181

ஸ்ம்ருதீதிஹாஸ நிர்ணீத தப்த சக்ராதி தாரண : ।
தப்தமுத்ரா நிஷேதாதி வசோநிர்வாஹ கோவித ॥ 182

ப்ரத்யக்ஷஶ்ருதி ரூப ப்ரமாணபோத்யோர்த்வ புண்ட்ரக ।
ஊர்த்வ புண்ட்ர ப்ரமாண ஸ்ம்ருதீதிஹாஸ புராணவித் : ॥ 183

ஊர்த்வபுண்ட்ரா நநுஷ்டாந நிமித்தாநர்த்த ஸாதக ।
ஸர்வவைதிக கர்மாங்கோர்த்வ புண்ட்ர த்ருதிகோவித : ॥ 184

பஸ்ம ஸ்ரீவைஷ்ணவாஸ்ப்ருஶ்ய பாவஸாதந தக்ஷிண ।
ஊர்த்வபுண்ட்ர த்ருதி த்ரவ்ய விஶேஷாவத்ருதிக்ஷம ॥ 185

அச்சித்ர புண்ட்ரதமநஸ் திர்யக்புண்ட்ர நிஷேதக ।
பகவத்பாத ஸத்ருஶோர்த்வபுண்ட்ராக்ருதி வேதிதா ॥ 186

புண்ட்ர ஸச்சித்ரதா வேத்தா புண்ட்ரஸங்க்யா விசாரக : ।
ஊர்த்வபுண்ட்ர த்ருதி ப்ரோக்த ப்ரகார விவ்ருதிக்ஷம ॥ 187

ஊர்த்வபுண்ட்ராநேக மந்த்ர வ்யவஸ்தாகரண ப்ரிய : ।
வர்ணாஶ்ரமாதி நியதோர்த்வ புண்ட்ரர்ங்குளி வேதிதா ॥ 188

ஊர்த்வபுண்ட்ர ஸ்தாநவேத்தோர்த்வபுண்ட்ர த்யேய
தேவவித் ।
ஶ்ருதிஸ்ம்ருத்யாதி நிர்ணீத விஷ்ணு நைவேத்யபோஜந: ॥ 189

விஷ்ண்வர்த்தாந்நாபக்த சக்ஷுர் தர்ஶநோத்ஸாரண ப்ரிய ।
பகவத்புக்த ஶேஷாந்நாபக்த தாந நிஷேதக : ॥ 190

அந்யதேவ நிவேத்யாதி போஜ்யத்வாபாவ ஸாதக : |
அநந்தாயுத பக்ஷீஶ நைவேத்யாத்யத்வ ஸாதக : || 191

ஸேநேஶ த்வாரபாலாதி நைவேத்யாத்யத்வ பாதக : |
ஸேநேஶ ஹவிராலம்பி பக்ஷபேத நிரூபக : || 192

விபக்த விஷ்ணுநைவேத்ய சாதுர்வித்யோபயோகவித் |
ஹரிபூஜா பயுக்தஸ்த்தாயி பூஜாந்தர யோகவித் || 193

விஷ்ணு நைவேத்யைக ஸாத்ய வைஶ்வதேவ விதிப்ரிய : |
விஷ்ணு நைவேத்யைக ஸாத்ய பித்ருஶ்ராத்த க்ரியாதிக : | 194

விஷ்ணு நைவேத்யைக ஸாத்ய ப்ராணாக்நி ஹவநக்ரிய : |
வைஶ்வதேவே ஜ்யோபயுக்த போஜ்யதா வாக்ய ஶோதக : || 195

விஷ்ணு நைவேத்ய ஹார்தாநிவேத்யாஶந நிஷேதக : |
அர்ச்சாஹார்தாதி ரூபாஶ்ய ஹவிரம்ஶ விஶேஷவித் || 196

அந்ய ப்ரயுக்தோபஜீவி ப்ராணாக்நி ஹவநக்ரிய : |
ஶடகோபாதி நைவேத்ய ஸார்த்தப்ராணாக்நி ஹோத்ரக : || 197

ந்யாஸவிம்ஶதி ஸங்க்ஷிப்த நிக்ஷேபா பேக்ஷிதாகில : |
ஸங்க்ஷிப்த ந்யாஸவித்யாங்க ஸ்ரீ ந்யாஸ தஶகப்ரத : || 198

நிக்ஷேப ரக்ஷாக்ருந் ந்யாஸ நிஷேத நவகாந்தக : |
ஆநுகூல்யா த்யங்கபேத ப்ரபத்யத்யாய பேதத்ருக் || 199

அந்யதேவ பராசார்ய த்யாகபர்யந்த போதக்ருத் |
ஸம்ஹிதாபேத கம்ய ந்யாஸவித்யா மநுபேதவித் || 200

ந்யாஸ பக்தாபசாராதி நாஶ்யத்வ வ்யாக்ருதிக்ஷம : |
ந்யாஸமந்த்ர த்வயந்யாஸ ஸர்வாதிக்ருதி ஶோதக : || 201

பும்ஸூ வித்யா ந்யாஸவித்யா ஶேஷபாவ ப்ரகாரவித் |
ஸங்கல்பித குருபாயா ஸங்க்ராஹ்ய லகுவேதிதா || 202

ஸ்ரீராம சரமஶ்லோக வ்யாக்யாந கரணக்ஷம : |
ஶ்ருத்யந்த வேதந க்ராஹ்ய பக்தி ந்யாஸோபபாதக : || 203

ப்ரஹ்ம ஸூக்தாத்யுக்த பக்தி ந்யாஸவித்யா த்வயோத்ஸுக : |
மோக்ஷார்த்தாராதநாத்யர்த்த ந்யாஸாவாந்தர பேதவித் || 204

பாஷ்யகாரோக்த கத்யத்ரய வ்யாக்யாந விசக்ஷண : |
கத்யத்வய வ்யாக்ருதித்வ நிரூபண விசக்ஷண : || 205

கத்ய ப்ரபத்தி ப்ராதாந்ய பரத்வ ப்ரதிபாதக : |
ப்ரபித்ஸு பூர்வமத்யைஷ்யத் காலகர்த்தவ்ய போதக : || 206

ஶரண்ய பூர்வமத்யைஷ்யத் காலகர்த்தவ்ய வேதிதா |
லக்ஷ்மீப்ரபத்தி மோக்ஷார்த்த ப்ரபத்யர்த்தத்வ ஸாதக : || 207

கமலாநுக்ரஸைஹகாந்த்ய பாரம்ய த்ராணதீக்ஷித : ।
ஸ்ரீந்யாஸ பாரமைகாந்த்ய பஞ்ஜகத்வ நிவாரக : ॥ 208

பரபக்தி பரஜ்ஞாந பரமப்ரேம போதக : ।
ந்யாஸ ஸ்வரூப விஷயாயத்த வைஷம்ய ஸாதக : ॥ 209

பஞ்சாயுதாவாந்தரீய ப்ரயோஜந விசாரக : ।
பஞ்சாயுத ப்ரமாணீய விரோதோத்தார கோவித : । 210

கத்யோக்த பித்ருமாத்ராதி த்யாகநிர்வாஹ கோவித : ।
அக்ருத்ய க்ருத்யாகரணபசாராதி விஶேஷவித் ॥ 211

பக்தாபசார வித் பாப ஶக்திபேத நிரூபக : ।
ரஹஸ்ய ஸ்பஷ்ட பச்தரபசாராதி பரிஹாரவித் ॥ 212

வர்த்தமாந பவிஷ்யத்காம்யக்ஷமார்த்தந யுக்திவித் ।
ப்ரபந்நாபுத்தி பூர்வைநோ நிஷ்க்ருத்யுக் த்யவிரோதவித் ॥ 213

சதுஶ்ஶ்லோகீ பாஷ்யஸூக்த லக்ஷ்மீஶத்வோபபத்திக : ।
லக்ஷ்மீ விஷயதுர்வாதி விருத்தோக்தி நிவாரக : ॥ 214

ஸ்தோத்ரபாஷ்ய க்ருதி வ்யக்த யாமுநாசார்ய மாநஸ : ।
ஸ்வார்த்தாந்யாக்த ஸ்தோத்ர ஸர்வ புருஷார்த்தத்வ ஸாதக : ।

குரு தத்குரு ஸம்பாத காலப்ராசார்ய தாஸ்யக்ருத் : ।
வைகாநஸாகமாத்யுக்த நதிபேத விசாரக : ॥ 216

வகுளாபரணாசார்ய பாவாநேக விரோதஹா ।
அத்யக்ஷாகம ஸத்ஸூக்தி நிர்ணீத ஜகதீஶ்வர: ॥ 217

நாராயணாத்யநந்யார்த்த ஸம்ஜ்ஞாஸ்தேதர தைவத: ।
பாரம்ய ஸூசகாநேகா நந்யதா ஸித்த லிங்கத்ருக் ॥ 218

வக்த்ரு ஸத்வாத்யநுகுண ஸாத்விகாதி புராணவித் ।
ஸாத்விகாதி ப்ரவசந ஸாத்விகத்வ ப்ரஸாதக : ॥ 219

ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷாக்ருத் பஞ்சராத்ர ப்ரமாணவித் ।
அஸ்மார்த்த ஸம்ஸ்க்ரியாதீநா ப்ராஹ்மண்யாபத்தி வாரக : ॥ 220

த்ரய்யாகமோக்த கர்மாதிகாரி வைஷம்ய ஸாதக : ।
ஏகாயநாபௌருஷேய பாவஸாதந வேதிதா ॥ 221

ஸ்ரீபாஞ்சராத்ர ஸித்தாந்த பேதலக்ஷண வேதிதா ।
சதுர்விதாகம ப்ரஹ்ம ப்ராப்திஹேதுத்வ ஸாதக : ॥ 222

ஸித்தாந்த ஸம்ஹிதாதத்தத் ஸாங்கர்ய பரிஹாரவித் ।
ஸ்வாந்ய ஸித்தாந்த கர்மாதிகாராபாவ ப்ரஸாதக : ॥ 223

ஆகமா வாந்தரோத்கர்ஷாபகர்ஷாதி விதாயக : ।
உத்க்ருஷ்டஸ்த்த நிக்ருஷ்டோக்த க்ரியாதிக்ருதி போதக : ॥ 224

வைகாநஸாக்ய தந்த்ர ப்ரமாணத்வ விவ்ருதிக்ஷம : ।
வைகாநஸாகமாந்யோந்ய ஸாங்கர்யாஸக்தி பஞ்ஜக : ॥ 225

ஸ்ரீபாஞ்சராத்ர ஸர்வோப ஜீவ்யத்வோக்தி விசக்ஷண : ।
ஸூத்ராந்தர ஸ்த்தாபிதார்ச்சா தந்த்ர பூஜா விதாயக : ॥ 226

ஶைவாகமாத்யமாந்யத்வ ஸம்ஸ்த்தாபந விசக்ஷண : ।
ப்ராக் ப்ரவ்ருத்த பரித்யாகோத்க்ருஷ்டாகம நிரோதவித் ॥ 227

ஸாத்விகாதி விபாகாதி நாகமாமாநதாபஹ : ।
பூர்வாகமோத்க்ருஷ்ட மார்க விதாந ஸுகதிப்ரத : ॥ 228

ஸ்வயம் வ்யக்தாதி பவந தாரதம்ய விதாயக : ।
தேவபூஜா முக்ய கௌணாதிகாரி வ்யாக்ருதி க்ஷம : ॥ 229

தேவேஜ்யாஷ்டாங்கதோத்கர்ஷ வர்ணநைக விசக்ஷண : ।
ப்ரயத்நா த்யநபேக்ஷ ஸ்வதஸ் ஸித்தோத்கர்ஷ வஸ்துத்ருக் ॥ 230

பரமைகாந்தி கர்த்தவ்ய பஞ்சகால க்ரியாஸுதீ ।
பாஷ்யகாராஶ்ரயீபூத பஞ்சகால ப்ரகாஶக : ॥ 231

வைஶேஷிக த்ரிகாலார்ச்சா பிதாநாத்ய விரோதத்ருக் ।
ஸ்ரீபாஞ்சராத்ர ஸ்ம்ருத்யைக கண்ட்ய ஸ்தாபநதக்ஷிண : ॥ 232

வ்யாஸ தக்ஷாத்யுக்ததர்ம ஶாஸ்த்ரார்த்த விவ்ருதிக்ஷம : ।
ஸர்வக்ரியா த்யங்கபூத ஹரிஸ்மரண போதக : ॥ 233

பஞ்சராத்ரோக்த பகவத் ஜ்ஞாந நித்யத்வ ஸாதக : ।
அர்ச்சாவதார ரஹித க்ருஹபோஜந தோஷவித் ॥ 234

பகவத்த்யாந ரஹித காலவைய்யர்த்ய ஸாதக : ।
ப்ராப்த காமார்த்த லிப்ஸா பாரமைகாந்த்யாநுகூல்ய த்ருக் ॥ 235

கைங்கர்ய காலாவஶ்யாநு ஸந்தேயார்த்த விஶேஷவித் ।
ஸமயாசார நியமா த்யாயோக்தா வஶ்யகத்வ வித் ॥ 236

வைஷ்ணவ ஸ்ரீ தர்மஶாஸ்த்ரோ தீரிதாவஶ்யகத்வவித் ।
ஆரம்ப மந்த்ரநிர்ணேதா ஸாத்விகத்யாக ஸாதக : ॥ 237

ராத்ர்யந்தோத்தாந ஸமய ஹரிகீர்த்தந ஸாதக : ।
நித்ரா நிமித்தாசமநா நுகல்பாவஶ்யகத்வ வித் ॥ 238

பூர்வக்ஷபா விரமித யோக கார்யத்வ வேதிதா ।
அபியாநாரம்பகால வேத்தா நிர்வேத காலவித் ॥ 239

நிர்வேத பலவித் கார்ய கர ஸாத்விக தைர்யவித் ।
மந்த்ராதிகம குர்வந்யோபாய தூஷண வேதிதா ॥ 240

குருத்யாநாநுகர்த்தவ்ய ஹரித்யாந ஸ்வரூபவித் ।
கைங்கர்யார்த்தாசார்ய விஷ்ணு த்யாநா நுத்யாந போதக: ॥ 241

நித்ய ப்ரயோஜ்ய கைங்கர்ய பூரணார்த்தந மந்த்ரவித் : |
ஸ்தோத்ராதி ஸத்தாவஶ்ய கீர்த்ய தேவதேவ்யாதி நாமவித் || 242

பகவந்மந்த்ர தத்கால சோதிதோசித ஜப்யவித் |
பதந்யாஸ மநுஜ்ஞாதா பதக்ரம மநூக்திமாந் || 243

கதிகாலாவஶ்யகார்ய கேஶவாஹ்வாந கீர்த்தந : |
ஸந்த்யா ஸ்தாநோபகரண க்ரஹணைக விசக்ஷண : || 244

மலமூத்ர விஸர்கார்த்த தேஶாதி ஸகலார்த்தவித் |
ஶௌச ஸங்க்யாக்ரம த்ரவ்ய காலவைஷம்ய ஸாதக : || 245

தந்ததாவந காஷ்டாதி வ்யவஸ்த்தா ந்யாயதத்பர : |
ஸ்நாநதீர்த்த விஶேஷஜ்ஞ: ஸ்நாநபேத விதாயக : || 246

உஷ்ணோதக ஸ்நாநகால வ்யவஸ்த்தா கரணக்ஷம : |
வாஸோதரண புண்ட்ராங்க தர்ப்பணக்ரம ஸாதக : || 247

ஸந்த்யோபாஸ்தி விஶேஷஜ்ஞோ காயத்ரீ ஸ்தாநஸாரவித் |
காயத்ரீஜப ஸங்க்யாந ஸாதநோத்கர்ஷ ஸாரவித் || 248

ஸந்த்யாகாலீந நியம வேத்தோபஸ்த்தாந காலவித் |
திகாதி நமநாஸக்த ...ாரமைகாந்த்ய பங்கஹா || 249

ஸந்த்யாகாலாவஶ்யகார்ய மூலமந்த்ர ஜபோக்திமாந் |
வ்யாக்ருதாதார ஶக்த்யாதி தேவர்ஷி பித்ருதர்ப்பண: || 250

நித்யதர்ப்பண கர்மாந்த வாஸ: பீடந ஸாதக: |
ப்ரஹ்மேஜ்யாகாலவித் க்யாத தீர்த்த மந்த்ரோபஸம்ஹ்ருதி: || 251

தீர்த்தாஸந்நாநந்த ஸத்ம ப்ரவேஶாவஶ்யகத்வ வித் |
பகவத்ஸத்ம ஸந்த்யாஜ்ய த்வாத்ரிம்ஶ தபசாரக: || 252

அப்யுக்ஷணோக்ஷித க்ருஹோ ஹோமகால விஶேஷவித் ||
பரகோக்ராஸ தாநர்த்தி ரபீயாந ஸ்வரூபவித் || 253

உபாதாநாக்ய ஸமய வேத்தோபாதாந மந்த்ரவித் |
ஹேயோபாதேய தேவார்த்த ஸமாதி த்ரவ்ய வேதிதா || 254

ஸ்வார்ஜிதாரண்ய மூல்ய க்ரீத யாசித குணவித் |
ஸமநோகத ஸத்வாதி க்ருதோபாதாந ஹாநக: || 255

திதிபேதாதி நியத புஷ்பபேதாதி ஸாதக: |
திவாநிஶா தேவயாக வ்யாப்த ஸூந விஶேஷவித் || 256

ஶாஸ்த்ராநுமத ஶிஷ்டாக்ராஹ்ய புஷ்பாதி நிவாரக: |
க்ருஹாலயார்ச்சாநியத வாஸ: புஷ்பாதி பேதவித் || 257

ஸ்ரங்மாலா பேதத்ருக் ஸூத்ர க்ரதிதாதி நிஷேதக: |
பகவத்யாக வர்ஜ்யோபாதேயாபரண ஶோதக: || 258

ப்ராண்யங்க ஸூரபித்ரவ்யோபயோக வ்யாக்ருதிக்ஷம: |
ஹேயோபாதேய முகுள பத்ராங்குர விசாரக: 259

திநக்வயாபர்யுஷித குஸுமோக்தி விசக்ஷண: |
போஜராஜாத்யுக்தகால புஷ்பபேத விசாரக: || 260

க்ராஹ்யமூல க்ரஹீதா தூப தீப த்ரவ்ய வேதிதா |
தஶா விஶேஷாநுமதார்ஜநோபாய விஶேஷவித் || 261

ஸர்வ ப்ரதிக்ரஹ வ்யாப்த மநுநிர்ணய கோவித: |
யதி புஷ்பக்ரஹோபாய விஶதீகரண க்ஷம: || 262

பூஜாத்யர்ஹாந்தராத்மீய குஞ்ஜோபாதாந ஸாதக: |
பாஷ்யகாரோக்த நித்யாக்ய க்ரந்த வ்யாகரணக்ஷம: || 263

இஜ்யாகால விஶேஷஜ்ஞ இஜ்யாப்ராதாந்ய ஸாதக: |
பரமைகாந்தி ஶப்தார்த்த தந்நிபந்தந வேதிதா || 264

யத்யந்ந தேவபூஜாதி மஹாதோஷ ப்ரஸாதக: |
பரமைகாந்தி ஸந்த்ருஷ்டாந்யதேவ நதிபாதக: || 265

கர்மண்யதா பாவஹேது பாப தச்சாந்தி ஹேதுத்ருக் |
இஜ்யாதிகார பேதஜ்ஞ இஜ்யாஸாரார்த்த வேதிதா || 266

ஸ்வாத்யாயகால ஸ்வாத்யாய பேதாதி க்ருதிபேதத்ருக் |
ஸ்வாத்யாய ஸார ஸந்த்ரஷ்டா ஸ்வாத்யாயாங்க விஶேஷவித் || 267

ஸாயம் ஸந்த்யா ஹோம தேவ பூஜா போஜந காலவித் |
புஜிலோப நிமித்தப்ராணாக்நி ஹோத்ர மநுஜப: || 268

ப்ரதோஷ வர்ஜித நிஶா யோக்யாதீதி விஶேஷவித் |
த்ரயோதஶீ பூர்வராத்ரி கார்யமௌந விஶேஷவித் || 269

ப்ரதோஷகால கர்த்தவ்ய ஸந்த்யா ஸங்கோச வேதிதா |
ப்ரதோஷாவஶ்ய வர்ஜ்யாஷ்டாக்ஷர மந்த்ர ஜபோக்திமாந் || 270

ஸந்த்யா த்யாஜ்யாஷ்டாக்ஷராந்ய காயத்ர்யந்ய ஜபக்ரிய: |
ஆஶௌசகால ஸந்த்யாஜ்ய காயத்ர்யந்ய ஜபக்ரிய: || 271

அத்யாயாநர்ஹ விஷ்ணுவாத்யநுஜ்ஞாத ஜபாந்தர: |
மௌநக்ரியா ஸமாயாத ஸச்சித்ரத்வ நிராஸக: || 272

ப்ரதோஷ நரஸிம்ஹாந்ய ஹரிதர்ஶந பாதக: |
ப்ரதோஷ காலாநுஜ்ஞாத ஸ்வக்ருஹார்ச்சா வலோகந: || 273

மத்யராத்ர நிஷித்தஸ்வ க்ருஹார்ச்சா பூஜநாதிக: |
மத்யராத்ரோபராகாதி கால வர்ஜ்யார்ச்சநாதிக: || 274

ஸர்வகாலாப்யநுஜ்ஞாதா ஸ்தாநஸ்த்த ஹரிதர்ஶந: |
அஷ்டாங்க யாக மத்யாநுஜ்ஞாத ஸ்வாத்யாய போகவித்: 275

ஸ்ரீபராஶர ஶாண்டில்யா த்யுக்த யோக ஸ்வரூபவித் |
ஸ்ரீபாஷ்யக்ருத் ஸம்ப்ரதாய ப்ரபந்நஜந யோகத்ருக் || 276

ந்யாஸ கத்யாத்யநுகுண விநியோக விதாயக: |
அர்ச்சாவதார விஷய யோகௌசித்யாபிதாயக: || 277

யோகாங்க ஸம்ஹ்ருதி ந்யாஸ ஸ்தாநாசமந ஸாதக: |
யோகோபகாரி கரண ஶ்ராந்திஹேது ஸுஷுப்திமாந் || 278

கட்வாதிரூப ப்ரஹ்மாதி ஸம்பரிஷ்வங்க பாவந: |
ஶாஸ்த்ரீய ஶயநீயாதி நியமாதி விதாயக: || 279

ஸ்வாராத்ய பகவத்பாத ஸரோஜந்யஸ்த ஶீர்ஷக: |
நித்ராரம்ப ச்சேதகார்ய மாதவத்யாந கீர்த்தந: || 280

ஏகாதஶ்யாதி லுப்தாநு யாக ஸப்தாங்க யாகத்ருக் |
த்வாதஶ்யாதி ப்ரபாதாத: பாரணாஸ்தாபந க்ஷம: || 281

பாரணாதிந மத்யாஹ்ந ஸப்தாங்கேஜ்யா விசாரக: |
அநேகேஜ்யா ஸந்நிபாத லுப்தோபாதாந லேஶக: || 282

அஶக்த்யவஸ்த்தா ஸ்வஸமாநர்த்விகாதி க்ருதேஜ்யக |
விதுர வ்ரதி ஸந்யாஸி வநஸ்த்தர்த்விங் நிஷேதக: || 283

ஸூதகாதி தஶாத்யாஜ்ய ஶுசிகர்த்தவ்ய கர்மக: |
மௌந ஶௌந்யாஶௌச கால கீர்த்ய த்யேய ஹரிப்ரிய: || 284

ஆஶௌசகால கர்த்தவ்யாபியாநாக்ய க்ரியாபர: |
ஸர்வக்ரியா ப்ரதிநிதி பகவந்நாம கீர்த்தந: || 285

ரஹஸ்யாம்நாய நிஷ்டாஶௌச நிஷேத விதாயக: |
ப்ரஹ்மவித்வ நிமித்தாக ஸங்கோச வ்யாஹ்ருதி க்ஷம: || 286

ப்ரக்ராந்தோத்ஸவ கார்யாதி ஸூதகாதி நிஷேதக: |
ஆஶௌசகால கர்த்தவ்ய மாநஸேஜ்யா விசாரக: || 287

ஆஶௌசகால கர்த்தவ்ய ஸந்த்யோபாஸ்தி ப்காரவித் |
துஷ்கரத்வ பரிஜ்ஞாந க்ஷுப்த பும்ஹர்ஷ வர்த்தக: || 288

பகவத்தர்ம ஸௌகர்ய விஶேஷ வ்யாக்ருதி க்ஷம: |
இஜ்யோபசாரவைகல்ய தோஷாதோஷ விசாரக: || 289

ஸங்கல்ப ஸூர்யோதயாத: க்ருத பாரக்ய நாடக: |
ஸங்கல்ப ஸூர்யோதயார்த்ய பத்ய வ்யக்த ஸ்வவைபவ: || 290

ச்சாத்ரபத்த த்வஜோத்பாஸி தஶாஶாஸௌத மண்டல: |
ஸ்ரீவைகுண்ட விநோதி ஸத் கவிநாடக லக்ஷ்மத்ருக் || 291

ஶாந்த்யைக ரஸபாவஜ்ஞ: ஶ்ருங்காராதி ரஸத்வஹா |
கௌடவைதர்ப்ப பாஞ்சால மாலாகார வசோதர: || 292

பாத்ரீக்ருத விவேகாதி குணஜிஷ்டாத்ரு தைவத: ।
ஸந்திபஞ்சக ஸம்வேஶ நாடகஸ்தாந கோவித: ॥ 293

ஸர்வஸங்கட வித்வம்ஸி விஶங்கட மநீஷித: ।
விம்ஶத்வர்ஷாதீத ஸர்வ வித்யாஸந்ததி பாரக: ॥ 294

த்ரிம்ஶத்வார ஶ்ராவித ஸ்ரீமச்சாரீரக பாஷ்யக: ।
யதீந்த்ரரார்ப்பித துர்வாதி விஜயார்த்த பவித்ரக: ॥ 295

வாதநாமா வாததோஷ வ்யவஸ்த்தாகரண க்ஷம: ।
ஸூக்ஷ்ம ஸூக்ஷ்மதராத்யந்த ஸூக்ஷ்மப்ரஶ்நோத்தர க்ஷம: ॥ 296

யதீந்த்ர க்ரந்த ஸாரபி மநஸ்க பதஶேகர: ।
ஶங்கராதி குத்ருங்மூர்த்த ந்யஸ்த வாமபதோஜ்வல: ॥ 297

குத்ருங் மூர்த்த ந்யஸ்தபாத ஸுவர்ண கடகோஜ்வல: ।
வைகுண்டலோக ஸ்த்ரீபும்ஸ மிதுநார்த்தோபபத்தி வித் ॥ 298

ஸ்வஶில்பஜித கீர்வாண தைத்யஶில்ப சமத்க்ருதி: ।
ஸமாதி ஸாதகஸ்தாந ஶுபாஶ்ரய நிரூபக: ॥ 299

அநாத்ம குணகாமாதி நிராஸாதி ப்காரவித் ।
மஹாத்மாத்மாநாத்ம குணசேஷ்டித ஜ்ஞாபந க்ஷம: ॥ 300

ராகவாப்யுதயோத்க்ருஷ்ட யாதவாப்யுதய ப்ரத: ।
ஸ்ரீஸேது ஶடகோபாதி ஸேவா ஸந்துஷ்ட மாநஸ: ॥ 301

சோளதேஶீய பகவத் க்ஷேத்ர ஸேவா ரஸாகுல: ।
ஹஸ்தீஶ ஸேவா குலாத்மா நரேந்த்ர மதஸர்ப்பஹா ॥ 302

நரேந்த்ர வந்திதஸ் தார்க்ஷ்ய தண்டகோத்தம தாத்ருதி: ।
புநர் வ்ருஷாத்ரி ரங்கேஶ ஸேவார்த்த கமநோத்ஸுக: ॥ 303

ஆஶ்சர்யாவஹ சாரித்ர வாஜிவக்த்ராதி தைவத: ।
வரதாசார்ய ஜநகோ ஜீவிதாகில விஷ்டப: ॥ 304

ஹயாஸ்ய பூர்த்த தீர்த்தாஹர் த்ருஷ்ட லஜ்ஜித விக்நக்ருத் ।
ராத்ரி நிர்வ்யூட ரங்கேஶ பாதரக்ஷா ஸஹஸ்ரக: ॥ 305

பாதரக்ஷா ஸஹஸ்ரோக்த பாதுகா ஸேவகாபித: ।
ரங்கேஶ தத்த கவிதார்க்கிக ஸிம்ஹாபிதாநக: ॥ 306

ஸம்ப்ரதாய பரீஶுத்தி ஸ்தாபிதாசார்ய ஸத்பத: ।
ஸத்ஸம்ப்ரதாய ரஹித ஶாஸ்த்ராநாதர போதக: ॥ 307

ஸச்சாஸ்த்ர மூலாந்ய ஸம்ப்ரதாயாநாதர போதக: ।
கல்யாதி நிகமாந்த ப்ரவர்த்தகாவத்ருதி க்ஷம: ॥ 308

ஶடகோபாசார்யபாவ ஸ்தாபநைக விசக்ஷண: ।
அநுகூலாசார்யவம்ஶ்ய வித்யாதாந ஸுபாத்ரவித் ॥ 309

முக்யப்ரதாநாசார்யத்வ ஸ்தாபநைக விசக்ஷண: ।
ஸ்ரீமத்ராமாநுஜாசார்ய ஸம்ப்ரதாய விரோதஹா ॥ 310

ரஹஸ்யதத்வ த்ரிதய பதவீக்ருதி பாஸுர: ।
ரஹஸ்யதத்வ ரத்நாவல்யலங்க்ருத ஸுஹ்ருந்மநா: ॥ 311

தத்வரத்நாவளீ ப்ரதிபாத்ய ஸங்க்ரஹகாரக: ।
தத்வரத்நாவளீ கம்ய ஜ்ஞாந பர்யாப்தி போதக: । 312

ரஹஸ்ய ரத்நாவள்யாக்ய ரஹஸ்ய வ்யாக்ருதி ப்ரிய: ॥
ந்யாஸயுத்தரைந: ப்ரதிபதோக்த நிஷ்க்ருதி ஸாதக; ॥ 313

ஸ்ரீ தத்வ நவநீத ப்ரீத ஹஸ்திகிரி நாயக: ।
ரஹஸ்ய நவநீதோக்தி ஹ்ருஷ்ட வேங்கடநாயக: ॥ 314

காலதாமஸ பாவாதி நிபந்தந விசாரக: ।
பகவத் த்ரிஸ்த்தலாவாஸ க்ரியாவ்யாக்ருதி தக்ஷிண: ॥ 315

யுகபேதாதீத வர்ண பகவத்தேஹ தர்ஶந: ।
ஸ்ரீதத்வ மாத்ருகா ஹ்ருஷ்ட பகவத்பக்த மாநஸ: ॥ 316

ரஹஸ்ய மாத்ருகா தத்த ப்ரபந்நாந்வஹ தோஷக: ।
ஸாரஸங்க்ரஹக்ருத் ந்யாஸ க்ராஹ்யாக்ராஹ்ய விபாகவித் ॥ 317

ப்ரபந்ந ஸ்வீக்ருதிக்ருத பூர்த்யபூர்த்தி விசாரக: ।
மாநாதி தஶகாலம்பி விவேகி பல போதக: ॥ 318

மாநப்ரமேய விச்சிஷ்யாசார்ய க்ருத்யாதி ஸாரவித் ।
வ்யக்தீ க்ருதாகிலோத்கர்ஷ ஸ்ரீரஹஸ்ய ஶிகாமணி: ॥ 319

ஸ்ரீமத்வராஹாவதார ஸர்வாதிக்யாபிதாயக: ।
வராஹாக்ய புராணோதிஶய வர்ணந தக்ஷிண: ॥ 320

ப்ரபத்திபர வாராஹ சரமஶ்லோக போதக: ।
யாமுநோக்தி பரிஷ்கார்யஞ்ஜலி வைபவகாரக: ॥ 321

ப்ரபந்நவிஷய ஸ்ரீமததிகப்ரீதி ஸாதக: ।
ஸ்ரீமத் தாஸ்யாநந்ய தைவத்வாதந்யார்த்ததத்வ சிஹ்நத்ருக் ॥ 322

ப்ரதாந ஶதக வ்யக்தீக்ருத முக்யார்த்த ஸஞ்சய: ।
ஸதாநு ஸந்தேயார்த்தோபகார ஸங்க்ரஹ காரக: ॥ 323

மஹோபகாரவித் ஸார ஸாராக்யாந க்ருதிப்ரிய: ।
பராங்குஶாதி நிர்வ்யாஜ ரக்ஷணோக்தி விரோதஹா ॥ 324

ரஹஸ்யதத்வ த்ரிதய சுளகாஸ்வாதிதாஶ்ரித: ।
அபயப்ரதாந ஸார ஸ்பஷ்ட ராமாயணோந்தர: ॥ 325

ஸ்ரீஶாபசார ரஸிக வைஷ்ணவா நாதரோக்திமாந் ।
ஸ்ரீஶாபசார பக்தாநாதர க்ஷபண காலவித் ॥ 326

ந்யாஸாபேக்ஷித ஸர்வார்த்த வ்யஞ்ஜகாதிம காவ்யவித் ।
ஸ்ரீமத்க்ருபா பரிணத ஸோபாந பதவீப்ரியஃ ॥ 327

அர்ச்சிராதி மஹாமார்க விரோத ஶமநப்ரியஃ ।
மாதவாத்மஜ பூபார்த்த தத்வஸந்தேஶ காரக: ॥ 328

ரஹஸ்ய ஸந்தேஶக்ருதி ப்ரீத மாதவபுத்ரக: ।
ரஹஸ்ய ஸந்தேஶ விவரணாக்ய க்ருதி தோஷகஃ ॥ 329

மாதவாத்மஜ பூபார்த்த ஸுபாஷித விதாநவித் ।
ஹம்ஸ ஸந்தேஶ விவ்ருத பகவத்ப்ரேம தல்லஜ: ॥ 330

ஸ்ரீமந்மௌளி க்ரமாபிக்ய க்ரந்த நிர்மாண கோவித: ।
லோகாசார்யாதி ஸச்சிஷ்யார்ப்பித ஶாரீர பாஷ்யக: ॥ 331

ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ராதி ஶிஷ்யார்ப்பித ரஹஸ்யகஃ ।
க்ருதாஶீதி ஸஹஸ்ர த்ரமிடாகம பரிமளஃ ॥ 332

முநிவாஹந போகாக்ய க்ரந்த ஸம்ப்ரீத ஸஜ்ஜந: ।
ஸ்ரீமந் மதுரகவ்யுக்தி காதா வ்யாக்யாந தக்ஷிணஃ ॥ 333

த்ரமிடாம்நாய தாத்பர்ய ரத்நாவளி விதாயகஃ ।
த்ரமிடோபநிஷத்ஸார ப்ரபந்தோஜ்வல மாநஸஃ ॥ 334

ஶ்லோகத்ரயோக்த பகவதாராதந விதிக்ரம: ।
நவஶ்லோகீ ஸங்க்ருஹீத ப்ரஹ்மஸூத்ர விதாநக: ॥ 335

ப்ரபந்தஸார நிர்மாதா ऽऽஹார நையத்ய கீதிக்ருத் ।
மூலமந்த்ரார்த்த ஸங்க்ராஹி காதாக்ருதி விஶாரத: ॥ 336

த்வயமந்த்ரார்த்த ஸங்க்ராஹி காதாகரண தக்ஷிணஃ ।
சரமஶ்லோக ஸங்க்ராஹி காதா ஸங்க்ரஹ கோவிதஃ ॥ 337

ப்ரபத்தி கர்ப்ப கீதார்த்த காதாக்ருதி விசக்ஷண: ।
லக்ஷ்மணாசார்ய ரோகக்ந பாததீர்த்த ப்ரபாவக: ॥ 338

ஶ்ருதப்ரகாஶிகா ரக்ஷா ரக்ஷிதாத்யாத்ம பாஷ்யகஃ ।
யாதவாசல பத்ராஶாஸநார்த்த கதிபாஸுர: ॥ 339

அபீதி ஸ்தவ ஸஞ்ஜாதாபீதி ரங்கபுரீ கதி: ।
ரங்கப்ராபித ரங்கேஶ கோபணார்ய ஸ்துதிப்ரிய: ॥ 340

ரஹஸ்யத்ரய ஸாரோஜ்ஜீவித சேதந ஸஞ்சயஃ ।
த்ரமிடோபநிஷத் த்ரஷ்ட்ரு ஸூரிப்ருந்தோபகாரவித் ॥ 341

மோக்ஷைக ஸாதநாசார்யவத்தா ஸாதந தத்பர: ।
ஜீவாசார்யாதி ஶரண்யாந்த பக்திக்ரம விஶேஷவித் ॥ 342

ஸ்ரீமத்பகவதாசார்ய பாவ பாதக பாதக ஃ ।
ஶடாரிநாத யோகீந்த்ர குருஶிஷ்யத்வ ஸாதகஃ ॥ 343

அபரீக்ஷ்ய ரஹஸ்யாதி ப்ரதாந பஹுதோஷவித் |
பக்தி ப்ரகாஶித குரு வம்ஶ ஶிஷ்ய நிபந்தந: || 344

அஸம்பாஷ்யாதி ஸம்பாஷண நிஷ்க்ருதி குருஸ்ம்ருதி: |
மோக்ஷார்த்த ஶாஸ்த்ராநாரம்ப ஹேது திக்க்ருதி தக்ஷிண: || 345

ஆசார்ய நிகடப்ராப்தி ஹேது ஷட்க நிரூபக: |
ஸாரநிஷ்கர்ஷ குஶல: ப்ரதாந ப்ரதிதந்த்ரவித் || 346

ஶரீரதாரகதா ஶேஷித்வ நியந்த்ருத்வ போதக: |
ஜீவாதேயத்வ ஶேஷத்வ நியாம்யத்வ நிரூபக: || 347

ஸங்கல்பாதீந நித்யாக்ய வஸ்து ஸ்திதி விஶேஷவித் |
ஶேஷஶேஷ்யாதி ஸம்பந்த பலிதார்த்த விஶேஷவித் || 348

அர்த்த பஞ்சக தத்வஜ்ஞஸ் தத்வத்ரய விஶேஷவித் |
ஸ்வாதீந த்ரிவிதாசித் சித்ஸ்வரூபஸ்திதி வ்ருத்தித்ருக் || 349

ப்ரமாணகம்ய தர்மி ஸ்வரூப ரூபக தர்மவித் |
ஜீவலக்ஷண தத்வஜ்ஞோ பத்தலக்ஷண லக்ஷிதா || 350

பத்தஸ்திதி ப்ரவ்ருத்திஜ்ஞோ முக்தலக்ஷண லக்ஷிதா |
நித்யஸ்திதி ப்ரவ்ருத்திஜ்ஞோ நித்யாத்யந்யோந்ய பேதத்ருக் || 351

நித்யமுக்தாத்ம கைங்கர்ய ஸார்வவித்ய நிரூபக: |
த்ரிகுணஸ்திதி வ்ருத்திஜ்ஞ: ஶுலக்ஷண லக்ஷிதா || 352

அவதாரஹஸ்யஜ்ஞ: பரவ்யூஹாதி பேதத்ருக் |
ஸ்ரீ ஜகத் காரணத்வாதி ஸாதகாநேக யுக்திமாந் || 353

ஸ்ரீமந்நாராயண பரதேவதா நிர்ணயக்ஷம: |
ஸர்வதேவ பரப்ரஹ்மாபேத கண்டந தக்ஷிண: || 354

த்ரிமூர்த்திஸாம்ய தமநஸ் த்ரிமூர்த்யைக்ய விநாஶக: |
த்ரிமூர்த்யுத்தீர்ண பரம தேவதா கண்டநக்ஷம: || 355

த்ரிமூர்த்யந்தர்கத ப்ரஹ்ம ருத்ரபாரம்ய கண்டந: |
ப்ரஹ்மருத்ராதி கார்யத்வ கர்மவஶ்யத்வ ஸாதக: || 356

ப்ரஹ்மருத்ராதி பகவத் பாரதந்த்ர்ய விசாரக: |
ப்ரஹ்மாதி பகவந்மாயாயத்ததீ ஹ்ராஸ வ்ருத்தித்ருக் || 357

விஷ்ணுதர்ஶித ஸர்கோப ஸர்காதி விதிஶம்புத்ருக் |
ஶுபாஶ்ரயத்வ ரஹித ப்ரஹ்மருத்ராதி ஸாதக: || 358

ப்ரஹ்மருத்ராதி த்ரிகுண பாரவஶ்ய நிரூபக: |
ப்ரஹ்மருத்ராதி பகவதாஶ்ரிதத்வ விதாயக: || 359

ப்ரஹ்மருத்ராதி பகவத் விபூதித்வ நிரூபக: |
ப்ரஹ்மருத்ராதி பகவத் ப்ரகாரத்வாபிதாயக: || 360

ப்ரஹ்மருத்ராதி பகவச் சரீரத்வ ப்ரகாஶக: ।
ப்ரஹ்மருத்ராதிபகவத் தாஸத்வ ஸ்தாபநக்ஷம: ॥ 361

ஸாத்விகத்வோத்பத்திஹேது மதுஸூதந த்ருஷ்டித்ருக் ।
ரஜஸ்தமோ குணஶக்தி ஹேது ப்ரஹ்மாதி த்ருஷ்டித்ருக் ॥ 362

ப்ரஹ்மருத்ராதி மோக்ஷார்த்தி ஜநோபாஸ்யத்வ பாதக: ।
ப்ரஹ்ம ருத்ராத்யுபாஸ்யத்வ வசோநிர்வாஹ காரக: ॥ 363

ப்ரஹ்மருத்ராதி பாரம்ய த்ருக் கர்மாநர்ஹதாதி த்ருக் ।
ப்ரஹ்மாதி பகவத் ஸாம்ய த்ருக்பாஷண்டித்வ ஸாதக: ॥ 364

விஷ்ணுநிக்ராஹ்ய பாத்ரத்வ ரஹிதேதர தைவத்ருக் ।
க்ஷிப்ரேதர பலப்ராப்தி ஸாதநேதர தேவத்ருக் ॥ 365

காம்யாத்யர்த்தாஶ்ரிதாநந்த புருஷார்த்தத விஷ்ணு தீ: ।
அஜ்ஞாந்யதேவ யஜந ப்ரீதவிஷ்ணு ப்ரகாஶக: ॥ 366

அஜ்ஞாந்ய தேவயஜந பலவைகல்ய ஸாதக: ।
விஷ்ண்வாத்மகாந்ய தேவஜ்ஞ கர்ம பௌஷ்கல்ய ஸாதக: ॥ 367

நிஷ்காம விஷ்ணுஸேவாநுஷங்காந்ய பலஸித்தித்ருக் ।
பராங்குஶாதி ஸ்ரீஸூக்தி ஸாதிதோத்க்ருஷ்ட மாதவ: ॥ 368

முமுக்ஷாஹேது ஸாரஜ்ஞஶ் சாதிகாரி விபாகவித் ।
ப்ரபத்யவாந்தரபிதா வேத்தோபாய விபாகவித் ॥ 369

ப்ரபத்யதிக்ரியா பஞ்ச தஶநிர்ணய தூர்வஹ: ।
ந்யாஸவித்யாங்க பஞ்சத்வோபகார வ்யாக்ருதிக்ஷம: ॥ 370

விஶ்வாஸோத்கர்ஷ விஹதி காரண வ்யாஹதிக்ஷம: ।
விஶ்வாஸ கோபத்ருவரண ஶப்தார்த்தத்வ ப்ரகாரவித் ॥ 371

ப்ரபத்தி லக்ஷணாபிஜ்ஞோ ந்யாஸவித்யாங்கி வேதிதா ।
த்ரிவர்க மோக்ஷஜநக ந்யாஸவித்யா விஶேஷவித் ॥ 372

ஸாங்கப்ரபத்யநுஷ்டாந ப்ரயோகவிதி ஸாதக: ।
ஸாங்க ப்ரபத்யநுஷ்டாந ஸக்ருத்வ ஸ்தாபநக்ஷம: ॥ 373

ஸஹேதுக்ருத க்ருத்யத்வா நுஸந்தாந விஶாரத: ।
ஸ்வஸ்வரூபோபாய பல நிஷ்டாத்ரய விவேகவாந் ॥ 374

ப்ரபத்யுத்தர கர்த்தவ்ய க்ருத்யநிர்ணய தக்ஷிண: ।
பகவத்தாஸ கைங்கர்ய தாஸ்ய த்வைவித்ய வேதிதா ॥ 375

பகவத்தாஸதாஸ்ய ப்ராப்தாநந்யத்வ விரோதஹா ।
ஸ்ரீமத் பாகவதாந்யோந்ய தாஸ்யஸாதந தத்பர: ॥ 376

ப்ரபந்நாந்வஹ ஸங்க்ராஹ்ய ஶாஸ்த்ரீய நியமப்ரிய: ।
பாஷ்யகாரோக்த ஶாஸ்த்ராநு மதகைங்கர்ய ஸாரவித் ॥ 377

உல்லங்கிதாஜ்ஞாகரண வைஷ்ணவத்வ ப்ரஸாதக: ।
ப்ரபந்நாஜ்ஞாதிக்ரமாதி ப்ராயஶ்சித்த விஶேஷவித் ॥ 378

ஏநோநிஷ்க்ருத்யுதாஸீந ப்ரபந்ந லகுதண்டத்ருக் ।
ஆஜ்ஞாதிலங்கி கடிந ப்ரபந்ந நரகாப்ரிய: ॥ 379

ப்ரபந்ந புத்தி பூர்வைந: ப்ராயஶ்சித்த விஶேஷவித் ।
மஹாபாத ப்ரபந்ந ப்ரஸித்த நிஷ்க்ருதி வேதிதா ॥ 380

கடிநாநியதாயு: ப்ரபந்நாயுர் வ்ருத்தி ஸாதக: ।
மோக்ஷார்த்த ந்யாஸ ஸம்ஹார்ய தீபூர்வோத்தர பாபஹா ॥ 381

க்ருதபாதக நாஶார்த்த ஶரணாகதி வேதிதா ।
ப்ரபந்நாந்வஹ வாணார்ஹ ஸ்தாந வ்யாக்யாந கோவித: ॥ 382

விகலாங்க ந்யாஸவித்யா பூர்ணஹேதுத்வ ஸாதக: ।
தேவாந்தர த்ருடாஸக்த ப்ரபந்ந நரகோக்திமாந் ॥ 383

வித்வதேகாந்தோத்க்ரமண க்ரமதர்ஶந தோஷித: ।
உபாயாரம்ப நஷ்டாஶ்லிஷ்ட பூர்வோத்தர பாபத்ருக் ॥ 384

இஷ்டாவஹநதாந்யபலதிவைமுக்ய ப்ரபந்நவித் ।
விநஷ்டாஶ்லிஷ்ட புண்யாக விதூநந பதார்த்தவித் ॥ 385

புதபுண்யாக மித்ராரி ஸங்க்ராந்தி வ்யாஜபோதக: ।
அர்ச்சிராதி கதிஜ்ஞாதா ஸூக்ஷ்மதேஹ விஸர்கவித் ॥ 386

திவ்யதேஶ ப்ராப்திபூர்வ க்ரமதர்ஶந தக்ஷிண: ।
முக்தப்ரபந்ந ஸாநந்த விபுஜ்ஞாந துரந்தர: ॥ 387

மதுவித்யாத்யதிகாரி கத்யந்தர விஶேஷவித் ।
முக்த்யவஸ்தாநந்த தாரதம்யவாத விநாஶக: ॥ 388

ஜகத்ஸ்ரஷ்ட்ரு பரப்ரஹ்ம துல்யாநந்த விமுக்தித்ருக் ।
பரிபூர்ண பரப்ரஹ்மாநுபவ ஶ்ருதி வேதிதா ॥ 389

ஸுநிஶ்சிதார்த்த பரம ப்ரஹ்மாநுபவ ரீதிக: ।
ஸம்ஸார ப்ரதிகூலார்த்த முக்த்யவஸ்தாநுகூல்ய த்ருக் ॥ 390

ஸ்ரீபதித்வ பரப்ரஹ்ம துல்யாநந்த விமுக்தித்ருக் ।
ஸதாசார்யோபதேஶைகாதிகாரி ஜ்ஞாபநக்ஷம: ॥ 391

ஸத் தர்கோபதேஶாதிகாரி வ்யாக்ருதி கோவித: ।
வ்யாஜாநபேக்ஷ பகவத் ரக்ஷகத்வோக்தி வாரக: ॥ 392

ஸ்ரீமத் ஸ்வாதந்த்ர்ய காருண்யோபயோக வ்யாக்ருதிக்ஷம: ।
ப்ரபத்யதிக்ரியாவத் விஶேஷணத்வ நிரோதக: ॥ 393

மோக்ஷாநுபாய ஶரண வ்ரஜ்யாவாத விநாஶக: ।
ப்ரதிபந்த நிராஸைகோபயுக்த வ்யாஜ வேதிதா ॥ 394

தேவஸ்வாதந்த்ர்ய கருணா மூலவ்யாஜ நிராஸஹா |
ஸ்ரீமத்ஸம்பந்த மூல வ்யாஜநிராஸ மதாந்தக: || 395

அவ்யாஜ பகவத்பாத்ரபாவ மாநோபபத்திஹா |
த்வயபூர்வ ஸ்ரீபதோபலக்ஷகத்வ விநாஶக: || 396

ஸ்ரீவிஶேஷண பாவார்த்தோபாய த்வித்வ விபஞ்ஜக: |
நிர்வ்யூட ஶரணவ்ரஜ்யா விஶ்வாஸாபேத பூர்வவாக் || 397

ப்ரபத்தி ப்ரார்த்தநாபேத வாங்நிர்வாஹ விசக்ஷண: |
வாக்யஜந்ய ஜ்ஞாநமோக்ஷோபாயத்வ மதபஞ்ஜக: || 398

ஸ்வரக்ஷணார்த்த வ்யாபார நிவ்ருத்யுத்திதி தூர்வஹ: |
ப்ரபத்தி மோக்ஷோபாயத்வ பாதகவ்ராத நாஶக: || 399

சரமஶ்லோக நிகில தர்மத்யாக பரத்வஹா |
நிஷித்த வர்ஜநாதர்ம பாவத்வோக்த்யபநோதந: || 400

உபாஸந ஸ்வரூபோபாயஸ்வரூப விரோதஹா |
வர்ணாஶ்ரமாதி தர்ம ஸ்வரூபரோத விநாஶக: || 401

ஐகாந்த்யச்சேத்யந்யதேவ பரவர்ஜநதி தர்மஹா |
பக்திவித்யா ஸித்தஹேது ப்ரரோசந கரத்வஹா || 402

பக்திவித்யா ஶிஷ்டலோகா பரிக்ரஹ நிவாரக: |
பரந்யாஸாதி ஸகல கரலதர்மத்வ பஞ்ஜந: || 403

ந்யாஸ ப்ரஶம்ஸகோ ந்யாஸ பக்த்யாதிக்ய ப்ரதர்ஶக: |
அநுகூலத்வ ஸங்கல்பாத்யவஶ்யம்பாவ வேதிதா || 404

விஶ்வாஸாங்க மஹத்வாந்தராய பங்க விசக்ஷண: |
ப்ரபந்ந பகவத்ப்ரேம தாரதம்ய விதாயக: || 405

குருபக்தி லகுந்யாஸ பக்ஷோக்த்யோக்தி விசக்ஷண: |
பூர்வ பூர்வாக்ருதாம்ஶார்த்த புந: ப்ரபதநோக்திமாந் || 406

ஜஹிகார்த்த ந்யாஸகர்த்ரு ஹேது வைகல்யஸாதக: |
அபியாநாதி பஞ்சாவஸர க்ருத்ய பலோக்திமாந் || 407

விஷ்ணுபக்த சதுர்த்தாதி ப்ராஹ்மண்ய விநிவாரக: |
விதுராதி ஸ்வஜாத்யுக்த தர்மாலங்கந த்ருஷ்டிமாந் || 408

நிர்வ்யூட விதுரப்ரஹ்மமேத ஸம்ஸ்க்ருதி ஸூக்திக: |
யஜ்ஞேஶ விதுராந்நாதநோக்தி நிர்வாஹ தக்ஷிண; || 409

அதிதேஶாநர்ஹகாரி ஸூநுவ்ருத்த ப்ரகாஶக: |
பகவத்பக்த ஶௌத்ராதி தீதாநாதி க்ருதிப்ரிய: || 410

சைத்தகாயிக ஶௌத்ரத்வ பேதவ்யாக்யாந தக்ஷிண: |
நாராயணைக நிஷ்டேதி வசநார்த்த ப்ரதர்ஶக: || 411

நிஷித்த த்யாக தர்மாக்யா முக்யார்த்தத்வ விபஞ்ஜக: |
ஸ்ரீமத் ப்ரபாவ ஸந்த்ராதோபாய மாஹாத்ம்ய ரக்ஷக: || 412

பகவத்க்ஷேத்ர மாஹாத்ம்ய த்ருக் வைஷ்ணவ மஹத்வவித் |
ஸௌம்காரமூல மந்த்ராஷ்டாக்ஷரத்வ த்ராணதீக்ஷித: | 413

த்வயமூல மநுவ்யாக்யா ரூபத்வபரிஶோதக: |
மூலமந்த்ராஷ்டாக்ஷர பத தத்வார்த்த விஶேஷவித் || 414

மூலமந்த்ர மஹாவாக்ய யோஜநாஶதகாரக: |
த்வயப்ரபாவ விஜ்ஞாதா த்வயஶப்த நிருக்திவித் || 415

த்வய த்ரயீமூல தாந்த்ர மந்த்ரத்வ ஸ்த்தாபந க்ஷம: |
லக்ஷ்மீ புருஷகாரத்வ மாநஜ்ஞ: ஸ்ரீபதார்த்தவித் || 416

த்வயமந்த்ர பதப்ராத ப்ரத்யேக வ்யாக்ருதி ப்ரிய: |
ஸ்ரீஶோபாயாந்தர ஸ்தாநாபத்தி ஸாரார்த்த ஶோதக: || 417

கார்பண்ய கோப்த்ருவரண ஸார்த்தோபாயத்வ யாசந: |
உபாய வரணத்யாத்ம நிக்ஷேபாங்கித்வ ஸாதக: || 418

த்வயோத்தரார்த்த கம்யார்த்த புருஷார்த்த நிரூபக: |
த்வயமந்த்ர மஹாவாக்ய யோஜநாத்ரய ஸாதக: || 419

ஸ்ரீக்ருஷ்ண சரமஶ்லோகாவதார வ்யாக்ருதி க்ஷம: |
சரமஶ்லோக தர்மோக்தி வேத்ய நிர்ணய கோவித: || 420

புருஷோத்தம தீமோக்ஷ ஹேதுத்வ மதபஞ்ஜக: |
அவதார ரஹஸ்யஜ்ஞாநாதி மோக்ஷகரத்வஹா || 421

சரமஶ்லோக தர்மத்யாகாநுவாத மதப்ரிய: |
ப்ரபத்தி ஸர்வதர்மத்யாகாங்கோக்தி விதிபஞ்ஜக: || 422

க்ஷேத்ரஜ்ஞோபாஸநோபாய நித்யாஶக்தத்வ பஞ்ஜக: |
ஏகவாக்ய விதித்வாநு வாதத்வாநுபபத்தி வித் || 423

குருபாய லகூபாய கீ: ப்ரரோசகதா ப்ரிய: |
பக்திவித்யா மந்ததீகாதிகாரித்வ மதாந்தக: || 424

உபாஸநா மந்தவிஶ்வாஸாதிகாரித்வ நாஶக: |
உபாஸநா லோகஸங்க்ரஹார்த்தித்வ மதமாரக: || 425

ப்ரபத்திரூப ஸகல தர்மத்யாக மதாந்தக: |
ப்ரபத்யநுஷ்டாநகால ஸர்வதர்ம விமுக்திஹா || 426

ப்ரதக்ஷிண ப்ரணாமாத்யநுஜ்ஞா கைங்கர்ய ஹேதுத்ருக் |
அவஜ்ஞாக்ருத பக்தாதி ஜந்மசிந்தாதி தோஷத்ருக் || 427

ஶாஸ்த்ரவ்யவஸ்த்தா ஸித்யர்த்த பக்தஜந்மாதி சிந்தக: |
ஸாரகல்க ஸ்வரூபஸ்ரீமத்கைங்கர்ய விபாகத்ருக் || 428

ஸம்பந்ததீ முகாநேக மோக்ஷஹேது மதாந்தக: |
சரமஶ்லோக நிகில தர்மத்யாகி ஷடர்த்தவித் || 429

சரமஶ்லோகைக ஶப்த ஷடர்த்தோக்தி விசக்ஷண: ।
பரதந்த்ர ஸ்வபாவாத்ம வித்யநர்ஹத்வ பஞ்ஜக: ॥ 430

பரதந்த்ராத்ம கர்த்ருத்வ ஸ்வரூப விஶதோக்திமாந் ।
ஸ்ரீமத்கர்த்ரு ப்ரேரகாநு மந்த்ரு காரயித்ருத்வ வித் ॥ 431

க்ரியமாணைக வித்வம்ஸி ப்ரபத்தி ப்ரதிபாதக: ।
ப்ரஹ்ம வித்யாரம்ப நஷ்டாஶ்லிஷ்ட கர்ம ஸ்வரூபவித் ॥ 432

ப்ரியாப்ரியோபஸங்க்ராந்த வித்வத்புண்யாக வேதிதா ।
ப்ராப்த்யந்தராய வித் ஸாத்யோபாய ரோதி விஶேஷவித் ॥ 433

ப்ரதிகூலாநுபூத்யாதி ஹேது பாபஸ்வரூபவித் ।
குணேஷ்டகாவிர்ப்பாவோக்தி வேத்யார்த்த பரிஶோதக: ॥ 434

கைவல்யாக்ய புமர்த்த ஸ்வரூப நித்யத்வ பாதக: ।
மா ஶுச: ஶப்த நிர்ணுந்ந ஶோகாநேக விதத்வவித் ॥ 435

ஆசார்ய க்ருத்யவிச் சிஷ்ய க்ருத்யவேதந தீக்ஷித: ।
யதீந்த்ர மாஹாநஸிக ஸம்ப்ரதாய ஸுதாப்ரத: ॥ 436

விரோத பரிஹார ஸ்ரீஸாரஸாராக்ஷி யுக்மத: ।
ஸௌம்ய கார்த்திக ராகாஸ்ரீ பர்யங்காரோஹண ப்ரிய: ॥ 437

அத்ரார்ச்சயா ஜகத்ஸர்வம் பாலயந் ஜயதி ஹ்யஸௌ ॥ 438

இதம் குரோர் திவ்யஸஹஸ்ரநாம
ஸ்தோத்ரம் மஹார்த்தம் ஸரஸார்த்தபோதம் ।
படந்தி யே ஸர்வ ஸமீஹிதார்த்த
ஸித்திம் லபந்தே:த்ர பரத்ர சாபி ॥ 439

பலாநபேக்ஷாபி குரோ: ப்ரஸாதாத்
ஸித்திம் ஸமாப்நோ த்யநுஷங்க ஸித்தாம் ।
ஶ்ரமாபநோதாய க்ருதாவகாஹம்
கங்கா பவித்ரீ குருதே ஹி ஜந்தும் ॥ 440

கோபாலதாஸஸ்ய குருத்தமாங்க்ரி
பக்திஸ்ரவந்தீ ஹ்ருதயாப்ஜ கோஶாத் ।
நிர்கத்ய தந்நாம ஸஹஸ்ரரூபா
தத்த்வாயிந: ஸர்வஜநாந் புநாதி ॥ 441

இத்யாத்ரேய க்ருஷ்ணார்ய தநூஜஸ்ய ஸ்ரீமத்வேதாந்த
ராமாநுஜ மஹாதேஶிக கடாக்ஷலப்த ஸார்வஜ்ஞஸ்ய
கோபாலார்ய மஹாதேஶிகஸ்ய க்ருதிஷு
தேஶிக திவ்யஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்
ஸம்பூர்ணம்.

---

ஸ்ரீமதே கோபாலார்ய மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:

ஸ்ரீ:

# ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகாஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரம்

ஸாங்க்ய ஸௌகத சார்வாக ஶாங்கராதி தமோநுதம் |
த்ரய்யந்த தேஶிகம் வந்தே வேங்கடேஶாஹ்வயம் மஹ: ||

ஸ்ரீமத் வேங்கடநாதஸ்ய நாம்நாமஷ்டோத்தரம் ஶதம் |
ஸங்க்ருஹ்ய தத் ப்ரஸாதாய வக்ஷ்யே ஸர்வார்த்த ஸித்திதம் || 1

கண்டாவதாரோऽநந்தார்ய தநயோ வேங்கடாதிப: |
ஸ்ரீமல் லக்ஷ்மண யோக்யம்ஶோ வரதாசார்ய வீக்ஷித: || 2

ராமாநுஜார்ய ஸந்த்ருஷ்ட: ஸௌபர்ண மநுசிந்தக: |
தார்க்ஷ்யதத்த வர: ஶாந்த: ப்ரஸாதித ஹயாநந: || 3

அதீத ஸாங்கஸகல ஶ்ருதி ஸ்ம்ருதி விதக்ரணீ: |
இதிஹாஸ புராணஜ்ஞ: ஸுகவிஸ் தர்க்க தத்வவித் || 4

பாஷ்யகாரோ பயஹர: ஸுதாஶீ துக்தராசிக்ருத் |
ப்ரதாந ப்ரதிதந்த்ரஜ்ஞ: தேவதா பாரமார்த்யவித் || 5

ஶ்ருதவித்ய: ஶ்ராவயிதா ஶ்ருதபால: ஶ்ருதப்ரத: |
ஶ்ரித: பாண்டித்ய தாதா ச க்ருதக்ருத்ய: க்ருதீ ஸுதீ: || 6

நிரஸ்த ஸாங்க்ய: ப்ரத்யுக்த யோக: காணாத பஞ்ஜந: |
அசித்சைதந்ய வாதக்ந: க்ஷணிகாணுமதார்தந: || 7

ஸாகாரதீ நிராகர்த்தா ஶூந்யவாத தமோநுத: |
குத்ருஷ்டியுரக பக்ஷீஶ: ஸப்தபங்கீ விலோபந: || 8

பேதாபேத மதச்சேத்தா ஹூதயாதவ கல்பந: |
அநீஶவாதி தம்போளி: பாஷண்டமத கண்டந: || 9

ஸம்ரக்ஷிதாகம: ஶங்க சக்ர தாரண ரக்ஷிதா |
ஊர்த்வ புண்ட்ராங்கந த்ராதா ஶுத்த ஸத்வ மயாக்ருதி: || 10

யத்யாசார ப்ரதிஷ்டாதா ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரதீ: |
அவதார ரஹஸ்யஜ்ஞ: அர்ச்சா ஸௌந்தர்ய ஸக்ததீ: || 11

அர்த்த பஞ்சக தத்வஜ்ஞ: தத்வத்ரய விஶேஷவித் |
பக்தியோக விரோதிக்ந: பக்திமாந் பகவத் ப்ரிய: || 12

ஜ்ஞாநைகஸாரோ த்வயவித் விபக்தாதி க்ருதி த்ரய: |
சதுஶ்ஶ்லோக்யர்த்த ஸாரஜ்ஞ: ஸம்யக் ஜ்ஞாதாங்க பஞ்சக: || 13

ஷடங்கயோக நிர்ணேதா ஸப்ததந்து க்ருதுத்தம: ।
அஷ்டாக்ஷரைக நிரத: நவமைக ரஸாஶ்ரய: । 14

தஶதாத்பர்ய விஜ்ஞாதா ஶதக்ருச்ச ஸஹஸ்ரவித் ।
ஸ்தூல லக்ஷா஽நேக நாநா கோடி ஜ்ஞாந நிவர்த்தக: । 15

தர்மஶங்குஸ் ஸாது ப்ருந்த வந்திதாங்க்ரி ஸரோருஹ: ।
பத்மாக்ஷாநந்த ஜநக: ததாநந்த குணாகர: । 16

த்யாக ஶப்தார்த்தவித் தர்மவேதீ விதிவிஶேஷவித் ।
உத்தம ஶ்லோக பாவஜ்ஞ: பஞ்சகால பராயண: ॥ 17

ஸுரஸேவ்ய: பூர்ணமநா: ஸௌரீந்த்ர ப்ரதிரூபக: ।
கவிதார்க்கிக பஞ்சாஸ்ய நிகமாஞ்சல தேஶிக: ॥ 18

வைத்யோ முநீந்த்ரஸ் ஸர்வஜ்ஞ உபகர்த்தா குருத்தம: ।
ஸத்ஸம்ப்ரதாய ஸ்திரதீ: அநகஸ் ஸத்ய வாகபி । 19

ஸாதுவ்ருத்திர் முக்தடம்ப: ஜிதாக்ஷோ தீர்க்க பந்துமாந் ।
தயாளு: ஶாஸிதா ஸர்வ ஹிதாசரண தத்பர: । 20

மஹாகுரு: ஸ்வர்ணவர்ண: ஸுபாஹு: புண்டரீகத்ருக் ।
பவித்ரபாணிர் வ்யாக்யாந முத்ராங்கித கராம்புஜ: । 21

ஸவ்ய பாணிதலந்யஸ்த திவ்ய புஸ்தக பூஷண: ।
பரஶீர்ஷ ந்யஸ்த வாம பாதாப்ஜ கடகோஜ்ஜ்வல: । 22

பலஶ்ருதி :

இதீதம் தேஶிகேந்த்ரஸ்ய நாம்நாமஷ்டோத்தரம் ஶதம் । 23
ஸங்கீர்த்தயே தநுதிநம் ஸர்வபாபாபநுத்தயே ।

படந் நாமஶதம் பக்த்யா ஶ்ருத்வா குரு முகாம்புஜாத் । 24
ப்ரஸாதாத் தேஶிகேந்த்ரஸ்ய புக்திமுக்தீ ஸமஶ்நுதே ।

ஏகைகமபி தந்நாம கீர்த்தயந் ஸக்ருதுத்தமம் ।
ஸர்வாந் காமாநவாப்நோதி கிமுதாஷ்டோத்தரம் ஶதம் । 25

இதி ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகாஷ்டோத்தர
ஶதநாம ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.

ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# ஶ்ரீ நிகமாந்த தேஶிகாஷ்டோத்தர ஶத நாமாவளி:

ஓம் கண்டாவதாராய நம:
,, அநந்தார்ய தநயாய நம:
,, வேங்கடாதிபாய நம:
,, ஶ்ரீமல் லக்ஷ்மண யோக்யம்ஶாய நம:
,, வரதாசார்ய வீக்ஷிதாய நம:
,, ராமாநுஜார்ய ஸந்த்ருஷ்டாய நம:
,, ஸௌபர்ணமநு சிந்தகாய நம:
,, தார்க்ஷ்யதத்த வராய நம:
,, ஶூத் ஶாய நம:
,, ப்ரஸாதித ஹயாநநாய நம: 10
,, அதீத ஶாங்க ஸகல ஶ்ருதயே நம:
,, ஸ்ம்ருதி விதே நம:
,, அக்ரணயே நம:
,, இதிஹாஸ புராணஜ்ஞாய நம:
,, ஸூகவயே நம:
,, தர்க்கதத்வவிதே நம:
,, பாஷ்யகாராய நம:
,, பயஹராய நம:
,, ஸூதாஶிநே நம:
,, துக்த ராஶிக்ருதே நம: 20
,, ப்ரதாந ப்ரதிதந்த்ரஜ்ஞாய நம:
,, தேவதா பாரமார்த்யவிதே நம:
,, ஶ்ருத வித்யாய நம:
,, ஶ்ராவயித்ரே நம:
,, ஶ்ருத பாலாய நம:
,, ஶ்ருதப்ரதாய நம:
,, ஶ்ரிதாய நம:
,, பாண்டித்ய தாத்ரே நம:

ஓம் க்ருத க்ருத்யாய நம:
,, க்ருதிநே நம: 30
,, ஶூதியே நம:
,, நிரஸ்த ஸாங்க்யாய நம:
,, ப்ரத்யுக்த யோகாய நம:
,, காணாத பஞ்ஜநாய நம:
,, அசிச்சைதந்ய வாதக்நாய நம:
,, க்ஷணிகாணு மதார்தநாய நம:
,, ஸாகாரதீ நிராகர்த்ரே நம:
,, ஶூந்யவாத தமோநுதாய நம:
,, குத்ருஷ்ட்யுரக பக்ஷீஶாய நம:
,, ஸப்தபங்கீ விலோபநாய நம: 40
,, பேதாபேத மதச்சேத்ரே நம:
,, ஹூதயாதவ கல்பநாய நம:
,, அநீஶவாதி தம்போளயே நம:
,, பாஷண்ட மத கண்ட்டநாய நம:
,, ஸம்ரக்ஷிதாகமாய நம:
,, ஶங்க சக்ர தாரண ரக்ஷித்ரே நம:
,, ஊர்த்வ புண்ட்ராங்கந த்ராத்ரே நம:
,, ஶூத்தஸத்வ மயாக்ருதயே நம:
,, யத்யாசார ப்ரதிஷ்டாத்ரே நம:
,, ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரதியே நம: 50

ஓம் அவதார ரஹஸ்யஜ்ஞாய நம:
,, அர்ச்சா ஸௌந்தர்யஸக்த தியே நம:
" அர்த்த பஞ்சக தத்வஜ்ஞாய நம:
,, தத்வத்ரய விசேஷவிதே நம:
,, பக்தியோக விரோதிக்நாய நம:
,, பக்திமதே நம:
,, பகவத் ப்ரியாய நம:
,, ஜ்ஞானைக ஸாராய நம:
,, த்வயவிதே நம:
,, விபக்தாதி க்ருதி த்ரயாய நம: 60
,, சதுஸ்லோக்யர்த்த ஸார ஜ்ஞாய நம:
,, ஸம்யக் ஜ்ஞாதாங்க பஞ்சகாய நம:
,, ஷடங்க யோகநிர்ணேத்ரே நம:
,, ஸப்த தந்து க்ருதுத்தமாய நம:
,, அஷ்டாக்ஷரைக நிரதாய நம:
,, நவமைக ரஸாச்ரயாய நம:
,, தச தாத்பர்ய விஜ்ஞாத்ரே நம:
,, சதக்ருதே நம:
,, ஸஹஸ்ரவிதே நம:
,, ஸ்தூல லக்ஷாய நம: 70
,, அநேகநாநாகோடிஜ்ஞாந நிவர்த்தகாய நம:
,, தர்ம சங்கவே நம:
,, ஸாது ப்ருந்த வந்திதாங்க்ரி ஸரோருஹாய நம:
,, பத்மாக்ஷாநந்த ஜநகாய நம:
,, அநந்த குணாகராய நம:

ஓம் த்யாக சப்தார்த்தவிதே நம:
,, தர்ம வேதிநே நம:
,, விதிவிசேஷ விதே நம:
,, உத்தம ஶ்லோக பாவ ஜ்ஞாய நம:
,, பஞ்சகால பராயணாய நம: 80
,, ஶூரஸேவ்யாய நம:
,, பூர்ண மநஸே நம:
,, ஶௌரீந்த்ர ப்ரதிரூபகாய நம
,, கவிதார்க்கிக பஞ்சாஸ்யாய நம:
,, நிகமாஞ்சல தேசிகாய நம:
,, வைத்யாய நம:
,, முநீந்த்ராய நம:
,, ஸர்வஜ்ஞாய நம:
,, உபகர்த்ரே நம:
,, குருத்தமாய நம: 90
,, ஸத்ஸம்ப்ரதாய ஸ்திரதியே நம:
,, அநகாய நம:
,, ஸத்யவாசே நம:
,, ஸாது வ்ருத்தயே நம:
,, முக்த டம்பாய நம:
,, ஜிதாக்ஷாய நம:
,, தீர்க்க பந்துமதே நம:
,, தயாளவே நம:
, சாஸித்ரே நம:
,, ஸர்வ ஹிதாசரண தத்பராய நம: 100
,, மஹாகுரவே நம:
,, ஸ்வர்ணவர்ணாய நம:
,, ஶுபாஹவே நம
,, புண்டரீக த்ருசே நம:
,, பவித்ர பாணயே நம:
,, வ்யாக்யாந முத்ராங்கித கராம்புஜாய நம:
,, ஸவ்ய பாணிதல ந்யஸ்த திவ்ய புஸ்தக பூஷணாய நம:
,, பரசீர்ஷ ந்யஸ்த வாம பாதாப்ஜ கடகோஜ்வலாய நம: 108

ஶ்ரீ:

ஶ்ரீ குமார வரததேசிக விரசிதா

# ஶ்ரீமத் வேதாந்ததேசிக ப்ரபத்தி:

**ஶ்ரீமல்லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜம்।**
**விஶ்வாமித்ர குலோத்பூதம் வரதார்யமஹம் பஜே॥**

---

*வித்வந்மதங்கஜ ஶிகாபரணாயமானௌ*
*விஶ்வாதிஶாயி மஹிமாம்பு நிதாந பூதௌ ।*
*வித்வேஷி வாதமகுடக்ருத குட்டநௌ தௌ*
*வேதாந்தஸூரி சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥* 1

*விஶ்வம்பராமதிதராமபி பாஸயந்தௌ*
*விந்யாஸதோ விவிதஸஜ்ஜநதாநுபாவ்யௌ ।*
*விஸ்தீர்ணஸம்ஸ்ருதி மஹார்ணவ கர்ணதாரௌ*
*வேதாந்தஸூரி சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥* 2

*விஶ்வாந்தராந்ததமஸ க்ஷபணப்ரவீணௌ*
*வித்யோதமாந நகரேந்துமயூகஜாலை: ।*
*விக்யாத தாமரஸ ஶங்கரதாங்க சிஹ்நௌ*
*வேதாந்தஸூரி சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥* 3

*வித்வேஷமாந மதமத்ஸரவித்விஷௌயௌ*
*விஷ்ணவாலயாநுகமநோத்தம நித்யக்ருத்யௌ ।*
*வேதாந்த வ்ருத்தவிஹிதாஞ்ஜலி கோசரௌ தௌ*
*வேதாந்தஸூரி சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥* 4

*விஷ்ணவர்ப்பிதாத்மஜந பாக்ய விபாகபூதௌ*
*விப்ராஜமாந நவகோகநதாநுகல்பௌ ।*
*வேஷாந்தரோபகத பல்லவ தல்லஜௌ தௌ*
*வேதாந்தஸூரி சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥* 5

*வேதோ முகைரபி ஸுரைர் விஹிதப்ரணாமௌ*
*வேலாதிலங்கி ஸுஷமா ஸுகுமாரபாவௌ ।*
*விஸ்மேர கேஸரலஸந் ம்ருதுலாங்குலீகௌ*
*வேதாந்த ஸூரிசரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥* 6

வித்ராவிதோத்பட விகார ரஜோகுணௌ தௌ
 விக்யாத பூரிவிபவேந ரஜ:கணேந ।
விஸ்வோபகார கரணாய க்ருதாவதாரௌ
 வேதாந்தஸூரி சரணௌ ஸரணம் ப்ரபத்யே ॥ 7

விஷ்ணவங்க்ரி நிர்கத ஸரித்ப்ரவராநு பாவ்யௌ
 வித்யா விநீத ஜநிதைர் விமலை: ஸ்வதீர்த்தை: ।
வ்யாநம்ர ஸிஷ்யஜந ரக்ஷண ஜாகரூகௌ
 வேதாந்தஸூரி சரணௌ ஸரணம் ப்ரபத்யே ॥ 8

வீதீஷு ரங்கநகரே க்ருதசங்க்ரமௌ தௌ
 விஷ்ணூத்ஸவேஷு விதிவாஸவ ஸேவிதேஷு ।
வித்யாவிநீத ஜநதா விஹிதா நுஸாரௌ
 வேதாந்தஸூரி சரணௌ ஸரணம் ப்ரபத்யே ॥ 9

விஸ்வாஸ விஷ்ணுபதபக்தி விரக்தி ஸூந்யம்॥
 விப்ரஷ்ட க்ருத்யமபி மாம் விஷயேஷு ஸக்தம்
வித்வத்ஸபாநுகதியோக்ய மிஹாததாநௌ।
 வேதாந்தஸூரி சரணௌ ஸரணம் ப்ரபத்யே ॥ 10

ஸ்ரீமதே வேதாந்த தேஸிகாய நம: ॥

---

# ஸ்ரீதேசிக மங்களாசாஸநம்

**ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ ।**
**வேதாந்தாசார்ய வர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥**

**ஸ்ரீமல்லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜம் ।**
விஸ்வாமித்ர குலோத்பூதம் வரதார்ய மஹம் பஜே ॥
ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ராய ஸிம்ஹாய கவிவாதிநாம் ।
வேதாந்தாசார்ய வர்யாய வேங்கடேஸாய மங்களம் ॥1॥

நபஸ்யமாஸி ஸ்ரோணாயாம் அவதீர்ணாய ஸூரயே ।
விஸ்வாமித்ராந் வயாயாஸ்து வேங்கடேஸாய மங்களம் ॥ 2 ॥

பிதா யஸ்யாநந்த ஸூரி: புண்டரீகாக்ஷ யஜ்வந: ।
பௌத்ரோ யஸ் தநயஸ் தோதாரம்பாயாஸ் தஸ்ய
 மங்களம் ॥ 3 ॥

வேங்கடேஸாவதாரோऽயம் தத்கண்டாம்ஸோऽதவா பவேத் ॥
யதீந்த்ராம்ஸோதவேத்யேவம் விதர்க்யாயாஸ்து மங்களம் ॥ 4॥

ஸ்ரீ பாஷ்யகார: பந்தாந மாத்மநா தர்ஸிதம் புந: ।
உத்தர்த்து மாகதோ நூநமித்யுக்தாயாஸ்து மங்களம் ॥ 5 ॥

யோ பால்யே வரதார்யஸ்ய ப்ராசார்யஸ்ய பராம் தயாம் |
அவாப்ய வ்ருத்திம் கமிதஸ் தஸ்மை யோக்யாய மங்களம் || 6||

ராமாநுஜார்யா தாத்ரேயாந் மாதுலாத் ஸகலா: கலா: |
அவாப விம்ஶத்யப்தே யஸ் தஸ்மை ப்ராஜ்ஞாய மங்களம் ||7|

ஶ்ருதப்ரகாஶிகா பூமௌ யேநாதௌ பரிரக்ஷிதா |
ப்ரவர்த்திதா ச பாத்ரேஷு தஸ்மை ஶ்ரேஷ்டாய மங்களம் ||8|

ஸாம்ஸ்க்ருதீபிர் த்ராமிடீபிர் பஹ்வீபி: க்ருதிபிர் ஜநாந் |
யஸ் ஸமுஜ்ஜீவயாமாஸ தஸ்மை ஸேவ்யாய மங்களம் || 9 ||

ய: க்யாதிலாப பூஜாஸு விமுகோ வைஷ்ணவே ஜநே |
க்ரயணீய தஶாம் ப்ராப்த: தஸ்மை பவ்யாய மங்களம் || 10 ||

யஸ்மாதேவ மயா ஸர்வம் ஶாஸ்த்ரமக்ராஹி நாந்யத: |
தஸ்மை வேங்கடநாதாய மம நாதாய மங்களம் || 11 ||

பித்ரே ப்ரஹ்மோபதேஷ்ட்ரே மே குரவே தைவதாய ச |
ப்ராப்யாய ப்ராபகாயாஸ்து வேங்கடேஶாய மங்களம் 1|2

ய: க்ருதம் வரதார்யேண வேதாந்தாசார்ய மங்களம் |
ஆஶாஸ்தே ஶ்ருதிதம் ஸோऽபி பவேந் மங்கள பாஜநம் || 13 ||

கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாண குணஶாலிநே |
ஸ்ரீமதே வேங்கடேஶாய வேதாந்த குரவே நம ||

---

# 6. பிள்ளையந்தாதி

(ஸ்ரீ தேசிகன் திருக்குமாரரான நயினாராசாரியார், ஸ்ரீ தேசிகன் திருவடிவாரத்திலேயே ஸகலார்த்தங்களையும் பெற்றுத் தெளிந்தவர். அவர் ஸ்ரீ தேசிகன்மீது பிள்ளையந்தாதியென்னும் ப்ரபந்தத்தைப் பாடியருளினார். தூப்புற்பிள்ளையைப் பற்றிப் பாடிய அந்தாதி யாதலின் இது பிள்ளையந்தாதி எனப் பெயர் பூண்டது. இதில் ஸ்ரீதேசிகன் பெருமை நன்கு விளக்கப்பட்டுள்ளது.)

### தனியன்

ஸ்ரீமல் லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜம் |
விஶ்வாமித்ர குலோத்பூதம் வரதார்யமஹம் பஜே ||

சீரார் தூப்புற் பிள்ளையந்தாதியென்று செழுந்தமிழால்
நேராக வேதாந்த தேசிகர் தாளிணைக் கீழ் மொழிந்தான்
ஏரார் மறைப்பொருளெல்லா மெடுத்திவ் வுலகுயவே
சீராகிய வரதாரியன் பாதந்துணை நமக்கே.

## கட்டளைக்கலித்துறை

மாமலர் மன்னிய மங்கை மகிழ்ந்துறை மார்பினன் தாள்
தூமலர்சூடிய தொல்லருள் மாறன் துணையடிக்கீழ்
வாழ்வை யுகக்குமிராமானுச முனி வண்மை போற்றும்
சீர்மையனெங்கள் தூப்புற் பிள்ளைபாதமென் சென்னியதே. 1

சென்னி வணங்கச் சிறுபனி சோர வெங் கண்ணிணைகள்
வெந்நரகங்களும் வீயவியன்கதி யின்பமேவத்
துன்னுபுகழுடைத்தூப்புல் துரந்தரன் தூமலர்த்தாள்
மன்னிய நாள்களுமாகுங்கொல் மாநிலத்தீர் நமக்கே. 2

மாநிலத்தோதிய மாமறை மன்னிய நற்கலைகள்
ஆனவை செப்புமரும் பொருளத்தனையே யருளும்
தூநெறி காட்டுமிராமானுசமுனித் தோத்திரஞ்செய்
ஊனமில் தூப்புலம் மானோர் புகழன்றியுய்விலையே. 3

உய்யும் வகையிலை யுத்தரவேதியுள் வந்துதித்த
செய்யவள் மேவியசீரருளாளரைச் சிந்தை செய்யும்
மெய்யவனெந்தையிராமானுசனருள் மேவிவாழும்
ஐயனிலங்கு தூப்புற் பிள்ளையாய்ந்த பொருளன்றியே. 4

அன்றிவ்வுலகினையாக்கி யரும்பொருள் நூல்விரித்து
நின்றுதன்னீள் புகழ்வேங்கடமாமலை மேவியும்பின்
வென்றிப் புகழ்த்திருவேங்கட நாதனெனுங்குருவாய்
நின்றுநிகழ்ந்து மண்மேனின்ற நோய்கள் தவிர்த்தனனே. 5

வித்தகன் வேதியன் வேதாந்த தேசிகனெங்கள் தூப்புல்
மெய்த்தவனுத்தமன் வேங்கடநாதன் வியன்கலைகள்
மொய்த்திடு நாவின் முழக்கொடுவாதியர் மூலமறக்
கைத்தவனென்றுரைத்தேன் கண்டிலேனென் கடுவினையே. 6

வினைகாளுமக்கினி வேறோரிடந் தேடவேண்டும், எனைச்
சினமேவி முன்போற்சிதைக்கும் வகையிங்கரிது கண்டீர்
எனெனிலி ராமானுச முனியின்னுரை சேருந்தூப்புற்
புனிதரென் புந்தி புகுந்து திகழ்ந்து பொருந்தினரே. 7

பொருந்திப் புவிதனிற் பொய்வாழ்க்கை பூண்கின்ற பூரியர்காள்
இருந்து நரகினிடர் கெடுமாற்றை யறிகின்றிலீர்
பொருந்தும் பொருளொன்று கேளீர் பொங்கும் மிவ் விடர்க்கடற்கு
வருந்தாது தூப்புல் மாபூருடன் பாதம் வணங்குமினே, 8

வணக்கமொடுக்கம் வழக்கமொழுக்க மிரக்கஞ்சேரும்
இணக்கமுறக்க மிழுக்குமழுக்கு மிகந்து நிற்கும்
குணக்குலமோங்கு மிராமானுசன் குணங்கூறுந் தூப்புல்
அணுக்கனைப்பிள்ளை தனையரணாக வடைபவர்க்கே. 9

அடைபவர் தீவினை மாற்றியருள் கருந்தூப்புலைய
இடர்தருமிப் பிறவிக்கடல் தன்னிலமிழ்ந்த வென்னைக்
கடையறப் பாசங்கழற்றிநின் தாளிணை காணும் வண்ணம்
உடையவனே யருளாய் உணர்ந்தார் தங்கள் கற்பகமே. 10

கற்பகமே யென்று காசினியோரைக் கதிக்கமாட்டேன்
வெற்பிடையே நின்று வெந்த வத்தீயிலும் வேவமாட்டேன்
பற்பல்கலைவல பாவலனே பத்தரேத்துந் தூப்புல்
அற்புதனே யருளாயடியேனுக்கரும் பொருளே. 11

பொருளானதொன்று மென்னிற் பொருந்தாதது
[மன்றியந்தோ
மருளேமிகுத்து மறையவர் நல்வழிமாற்றி நின்றேன்
தெருளார் மறைமுடித் தேசிகனே யெங்கள் தூப்புல்தேவே
அருளாயினி யெனக்குன்னருளேயன்றி யாறிலையே! 12

ஆறுகவெண்ணும் அருங்கருமஞ் ஞானங்காதல் கொண்டு
வேறுகநிற்கும் விரமெனக்கில்லை விரத்தியிலை
தேறுதுதிண்மதி சீரார் கதியிலுஞ் செம்பொன்மேனி
மாறுத தூப்புல் மாலே மறவேனினி நின்பதமே. 13

நின்பதந்தன்னிலும் நேரே யெனக்கில்லை யன்புகண்டாய்
நின்பதமொன்றியவன்பரிலுந் நேசமில்லையந்தோ
என்படி கண்டினியென்பயன் ஏதமில் தூப்புலெந்தாய்
உன்படியே யருளாய் உதவாயெனக்குன்னருளே. 14

உன்னருளன்றி யெனக்கொரு நற்றுணையின்மையினல்
என்னிருவல்வினை நீயே விலக்கி யிதங்கருதி
மன்னியநற்றிரு மந்திரமோதும் பொருணிலையே
பொன்னருளாலருளாய் புகழ் தூப்புற் குலவிளக்கே. 15

விளக்காகி வேங்கட வெற்பினில் வாழும் விரைமலராள்
வளக்காதல் கொண்டுறை மார்பன் திறத்துமுன தடியார்
துளக்காதவில்லவர் தங்கள் திறத்திலுந்தூய்மை யெண்ணிக்
களக்காதல் செய்யுநிலை யடியாய் தூப்புற்காவலனே. 16

காவலரெங்கள் கடாம்பிக்குலபதியப்புளார்தம்
தேமலர்ச்சேவடி சேர்ந்து பணிந்தவர் தம்மருளால்
நாவலருந்தென் வடமொழி நற்பொருள் பெற்றநம்பி
காவல தூப்புற் குலத்தரசே யெமைக்காத்தருளே. 17

அருள்தரும் ஆரணதேசிகனே யெங்கள் தூப்புல் தேவே
வருகவி தார்க்கிக சிங்கமே வாதியர் வாழ்வறுத்தாய்
இருகையுங் கூப்பியுரைக்குமிவ் விண்ணப்பமொன்று கேளாய்
உருவவெனக் கருளாய் எண்ணுமுள்ள முன் தொண்டரையே. 18

தொண்டருகக் குந்துணையடி வாழி நின் தூமுறுவல்
கொண்டமுகம் வாழி வாழி வியாக்கியா முத்திரைக்கை
வண்டிரு நாமமும் வாழிமணி வடமுப்புரி நூல்
கொண்டசீர்த்தூப்புற் குலமணியே வாழி நின்வடிவே. 19

வடிவழகார்ந்தவண்டுப்புல்வள்ளல் மென்மலரடிமேல்
அடியவரோத வந்தாதியிருபது மாய்ந்துரைத்தேன்
திடமுடனீதைத் தினந்தொறு மாதரித்தோதுமன்பர்
முடியிடைநேர்படுந்தூப்புலம்மான்பத மாமலரே. 20

பிள்ளையந்தாதி முற்றிற்று.

## ஸ்ரீ தேசிகஸ்துதி:

### தொட்டையாசார்யர் (வைபவ ப்ரகாசிகை)

ஜயதி நிகம சூடா தேசிகேந்த்ரோ தயாளு:
ஜயதி ஸுமதி ஸேவ்யா ஶோபநா தஸ்ய ஸூக்தி: ।
ஜயதி ஶுபகுணம் தம் ஶீலயந் ஸூரிஸங்க:
ஜயதி வஸுமதீயம் தஸ்ய ஸஞ்சாரதந்யா ॥

### ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன்

ஜீவநம் ஜகதாம் ஜீயாத்
 ஜிமப்யபஹத ஸ்ப்ருஹம் ।
ஸ்வதந்த்ரம் ஸர்வதந்த்ரேஷு
 வேங்கடேஶாஹ்வயம் மஹ: ॥

### அண்ணயார்ய மஹாதேசிகன்

கவிதார்க்கிக கண்டீரவ சரணாப்ஜம்
 பிப்ருத மௌளி பாகேஷு ।
விலஸதி வ: ஸார்வஜ்ஞம்
 விபுத ஜநா: ஸர்வமங்களோல்லஸிதம் ॥

### ப்ரம்ஹதந்த்ர பரகால யதீந்த்ரர்

வாதி த்விப ஶிரோ பங்க பஞ்சாநந பராக்ரம: ।
ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: சிரம் விஜயதாம் புவி ॥



ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன்

(திருவஹீந்திரபுரத்தில் ஸேவை ஸாதிக்கிறபடி)

|| ஸ்ரீ : ||

# ஸ்ரீமத் வேதாந்தகுரு தண்டகம்

**ஸ்மயமாநாநநாம்போஜம் தயமாந த்ருஶம் குணை: ।**
**அயமாநம் குரும் ஸ்ம்ருத்வா வயமாநந்த பூரிதா : ||**

*பரிமித மதி துஷ்ப்ரவேஶாகிலாம்நாய கோடீ குஹாந்தர் நிராபாத ஸஞ்சார தீவ்யத் பரப்ரஹ்ம பஞ்சாஸ்ய நிஶ்ஶங்க ஹஸ்த க்ரஹாபூர்வ திவ்யௌஷதீபூத ஸூக்தி ச்சலோதீத திவ்யாபகா பூர நிர்த்தூத விஶ்வம்பரா பாப பாளீக நாளீக ஜந்மா த்யமேய ப்ரபாவ ப்ரதிஷ்டாபிதாஶேஷ ராமாநுஜா சார்ய ஸித்தாந்த ஸேதோ! பஜத்பவ்ய ஹேதோ! சிராவ்ருத்த ஸம்ஸார பாதோதி நிர்மக்ந லோகாவநோத்யத் தயாஸார ஶேஷாசலாதீஶ ஸங்கல்ப ஸம்பூத கண்டாவ தாரா கமாந் தார்ய நிஸ்ஸீம நிர்ஹேது காருண்ய ஸிந்தோ! ப்ரபந்நைக பந்தோ! தியாந்தம் மதாந்தம் பவாப்தௌ நிமக்நம் கதாசார கந்தம் பவத்பாத பங்கேருஹப்ரேம பந்தம் குருஷ்வ ப்ரபோ மாம் க்ருதாஜ்ஞாந பங்கை: பயோஜாந்தரங்கை ரபாங்கை ருதீக்ஷஸ்வ ரக்ஷ ஸ்வயம் || 1 ||*

*ஜய து நிகம தூளிகா தேஶிகோ நிர்மம ஸ்தோம துஸ்ஸாத நித்யாந மந்தாந நிர்மத்யமாநாத்ம சேத: பயோராஶி நிர்யத் ஸுதாபாநு ரேகாயிதாமந்த விஜ்ஞாந ஸம்மல்லிகா மஞ்ஜரீ வாஸிதாஶேஷ திங்மண்டலோ வித்விஷந்மண்டலீ பூமிப்ருத் கண்டநா கண்டல: குண்டலீஶ ப்ரதா ஹாரி பாண்டித்ய பாக் சண்ட பாநு ப்ரபா ஸ்பர்த்தி காய த்யுதிர் நிஸ்துல க்ரந்த நிர்மாண வைசித்ர்ய கண்டாபதீபூத துஷ்ப்ராப நி:ஶ்ரேயஸாஸ்த்தா நிஷித்தாகமாளீ விருத்த ப்ரசார: ப்ரபந்ந ப்ரஸித்தாபதாந ப்ரஜா விநிஶ்சேய ஸஞ்சாரி லக்ஷ்மீ ஸஹாயாவதாரோ மஹாந் || 2 ||*

*ப்ரபதந ஸரணி ஸ்வரூப ப்ரமாண ப்ரசாரேஷு புங்காநு புங்காயிதாநேக துர்வார ஸந்தேஹ ஸந்தோஹ காடாந்தகார*

ப்ரதாநப்ரதிக்ஷேப பாலாருணாகார நிக்ஷேபரக்ஷாதி ஸங்க்ஷிப்த யுக்த்யா விபக்ஷோக்தி ஶிக்ஷாதி தக்ஷம் ஜகத்பங்க பங்காப்ர கங்கா ஸமுத்பாதி துங்காநு பாவாந்த ரங்கேஶ பூ வாத ஸங்கோதயத் பாஷ்ய வாதாவளீ யுக்ம ஸம்பந்ந மாநந்த வாசா ஸுதாபூர தோராஹவோத்யுக்த ஸாராதிக ஸ்தோத்ர விஸ்மாபிதாஶேஷ வித்வஜ்ஜந ஸ்தோம ஸம்பாவ்யமாநம் பவாநீ தவாம்போஜ ஸம்பூத ஜம்பாரி முக்யாமர வ்ராத நிஶ்ஶங்க ஜ்ரும்பத் ஸ்வவிராயிதாநங்க தாஸீக்ருதி ப்ரௌட கம்பீர சித்த ப்ரவ்ருத்தம் பதாம்போஜ ஸக்தாப தம்போநிதி க்ராஸ கும்பீகுமாரம் பஜேஹம் துராசார துர்போத துர்வாத ஸங்தேஶ வைதேஶிகம் தேஶிகம் || 3 ||

பவ ஹ்ருதய சிரத்நகீ ரஞ்சலாசார்ய வர்யேத்புதாநந்த சர்யே விசார்யேஹ கத்யந்தரபாவ முத்புல்ல பத்ம ப்ரவாள ப்ரதிஸ்பர்த்தி பாதே, கதா யோதநோத்யுக்த ஸச்சாத்ர ஜைத் ரோதயத் காஹளீ ஶோபி ஜங்கா யுகீபாஜி, ரம்பா வநஸ்தம்ப கும்பீந்த்ர ஶுண்டோபமாநோரு காண்டே, வளக்ஷாம்ஶுக த்வந்த்வ ராஜத்கடீகே, ஸமுத்யத் விவஸ்வத் ப்ரபா புஞ்ஜ திக்காரி தேஜ:ப்ரவாஹாந்த விப்ராம்யதாவர்த்த ஶங்காஸ்பதீ பூத கம்பீர நாபௌ, கவாடப்ரமாதாயி வக்ஷோவிலோலத் துலஸ்யப்ஜ பீஜாக்ஷமாலே, கராம்போஜ நாளாயிதாஜாநு ஸம்லம்பி பாஹௌ, களஜ் ஜ்யோதிஷாதோ பவத் கம்புகாந் தௌ, ஶரத்பர்வ ஸோமாபி ராமாநநாம்போ ருஹாந்தர் ப்ரமத் ப்ருங்க யுக்மீ பவல்லோசநே, மோசநே துஷ்க்ருதாளீர் பஹிர்திர்ய தந்தஸ்த்த ஸத்வாம்ஶ ஸங்தேஹ பாத்ரீபவத் காத்ர ஸக்தோர்த்வ புண்ட்ர ஶ்ரியாலங்க்ருதே, வேங்கடேஶ குரௌ || 4 ||

**ஷட்ஸப்ததி கண்ணோபேத சரண்ணோ ம்ருது பந்தந: !**
**படதா மஶுப ச்சேதீ த்ரய்யந்தாசார்ய தண்டக: ||**

---

**குறிப்பு: *சுமார் 87 வருஷங்களுக்கு முன் தெலுங்கு லிபியில் அச்சிட்ட* 'ஸ்ரீமத் வேதாந்தகுரு ஸ்தோத்ர மஞ்ஜரீ' என்னும் நூலிலிருந்து எடுத்து வெளியிடப்பட்டது.**

## ஸ்ரீதேசிகன் வாழித் திருநாமம்

### நேரிசை வெண்பா

வாழி யிராமாநுசப் பிள்ளான் மாதகவால்
வாழு மணிநிக மாந்தகுரு—வாழியவன்
மாறன் மறையுமிரா மாநுசன் பாடியமும்
தேறும் படியுரைக்குஞ் சீர்.

### எண்சீராசிரிய விருத்தம்

வஞ்சப் பரசமயம் மாற்றவந்தோன் வாழியே
மன்னுபுகழ்ப் பூதூரான் மனமுகப்போன் வாழியே
கஞ்சத் திருமங்கை யுகக்கவந்தோன் வாழியே
கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே
செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன் வாழியே
திருமலைமால் திருமணியாய்ச் சிறக்கவந்தோன் வாழியே
தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன் வாழியே
தண்டமிழ்த்தூப் புல்திருவேங் கடவனருள் வாழியே!

### நேரிசை வெண்பா

நானிலமுந் தான்வாழ நான்மறைகள் தாம்வாழ
மாநகரின் மாறன் மறைவாழ—ஞானியர்கள்
சென்னியணி சேர்தூப்புல் வேதாந்த தேசிகனே!
இன்னுமொரு நூற்றாண்டிரும்.

## திருவோலக்கப் பாட்டு

வாழியணி தூப்புல் வருநிகமாந் தாசிரியன்,
வாழியவன் பாதார விந்தமலர்—வாழியவன்
கோதிலாத் தாண்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்
தீதிலா நல்லோர் திரள்.

## திருநாள் பாட்டு

வாதா சனவர ரிவரென வருமா பாடியம் வகைபெறுநாள்
வகுளா பரணப் பெருமாள் தமிழின் வாசி யறிந்திடுநாள்,
பேதா பேதம் பிரம மெனுவகை பிரமந் தெளிவுறுநாள்
பேச்சொன் றுக்குச் சததூடணியைப் பேசிய தேசிகநாள்
தீதா கியபல மாயக் கலியைச் சிக்கென வென்றிடுநாள்
திக்கெட் டும்புகழ் சீபா டியத்தைத் தெளிய வுரைத்
[திடுநாள்,
ஓதா தோதும் வேதாந் தாரிய னுதயஞ் செய்திடுநாள்
உத்தமமான புரட்டா சித்திருவோண மெனுந்நாளே. (1)

செங்கமலத்தய னன்னவரென்று புகழ்ந்து மகிழ்ந்திடுநாள்
சீர்கொளிராமா நுசவெனுமந்திரம் பதிகளில்
வாழ்திடு நாள்,
செங்கயல் வாளைகள் சேர்வயல் சூழ்ந்த வரங்கர் சிறந்திடு-
நாள்,
சிந்துர வெற்பிடைச் சென்று திகழ்ந்து சிரீபதி-
வாழ்ந்திடுநாள்,
தெங்கொடு மாங்கனி தேன்சுவை வேங்கடத்தீசர்-
பிறந்திடுநாள்,
சீர்மதி யாகம மௌலிதந் தேசிகர் பிறந்து
வளர்ந்திடுநாள்,
பங்கய மாமலர் மங்கை குணங்களைத் தெளிய-
வெளியிடுநாள்,
பார்திகழ் பாத்திரபதத் திருவோணமெனுந்-
திருநன்னாளே.

### ஸ்ரீ தேசிகனின் திருநக்ஷத்ரம்

கந்யா ச்ரவணஸம்பூதம் கண்டாம்சம் வேங்கடேசிது: |
ஸ்ரீமத் வேங்கட நாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம்||



THE ASŪRI BROTHERS